# ஆவிக்குரிய நினைவிழப்பு

இப்பொழுது நான் நம்புகிறேன், இப்பொழுது நான் நம்புகிறேன்;
யாவும் கைக்கூடிடும், இப்பொழுது நான் நம்புகிறேன்;
இப்பொழுது நான் நம்புகிறேன், இப்பொழுது நான் நம்புகிறேன்,
யாவும் கைக்கூடிடும், இப்பொழுது நான் நம்புகிறேன்.

2 கர்த்தருடைய வார்த்தைக்காக நாம் சிறிது நேரம் நின்றவண்ணமாக இருப்போமாக. நாம் ஆமோஸ், தீர்க்கதரிசியாகிய ஆமோஸ் 3-வது அதிகாரத்திற்கு திருப்பி, முதலாம் வசனம் துவங்கி பார்ப்போம்.

3 சகோதரி ஜீயனிட்டா, அன்னா ஜீன், சகோதரி மூர் அவர்களுக்கு அந்த அருமையான பாடலின் பல்லவிக்காக நான் நன்றி செலுத்த விரும்புகிறேன். நான் அங்கு அமர்ந்து அதைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அது எனக்கு பழைய நினைவுகளைக் கொண்டு வந்தது. இவர்கள் பாடுகையில், இவர்கள் நம்மோடிருந்து நமது கூட்டங்களில் பாடினதையும், இவர்கள் பதினாறு வயதுள்ள சிறுபெண்கள் என்று நானும் சகோதரன் ஜாக்கும் பேசிக் கொண்டிருந்ததையும் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது சகோதரி அன்னா ஜீன் அவர்களுக்கு ஐந்து பிள்ளைகளும், சகோதரி ஜீயன்ட்டா அவர்கள் இரண்டு பிள்ளைகளுக்கு தாயாகவும் இருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். ஆகவே நாம் அந்த சூரிய அஸ்தமனத்திற்கு அருகில் உள்ளோம், பெண்களே, அப்பொழுது இருந்ததுமுதல், சுமார் பதினாறு வருடங்கள் வித்தியாசம் உள்ளன. இன்னும் நீடிக்காது. அந்த மகிமையான நேரத்திற்கு நாம் கடந்து செல்வோம்.

4 இப்பொழுது ஆமோஸ் 3-வது அதிகாரத்தை நாம் படிப்போமாக.

*இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள்.*

*பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்.*

*இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?*

*தனக்கு இரை அகப்படாமலிருக்கக் காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமோ? இரை பிடியாமல் இருக்கும்போது பாலசிங்கம் தன் கெபியிலிருந்து சத்தமிடுமோ?*

*குருவிக்குத் தரையிலே சுருக்குப் போடப்படாதிருந்தால், அது கண்ணியில் அகப்படுமோ? ஒன்றும் படாதிருக்கையில், கண்ணி தரையிலிருந்து எடுக்கப்படுமோ?*

*ஊரில் எக்காளம் ஊதினால், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?*

*கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.*

*சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?*

நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

5 கர்த்தராகிய இயேசுவே, ஆண்டவரே, உம்முடைய வார்த்தையில் இந்த பாகத்தில் நாங்கள் இன்றிரவு ஐக்கியங் கொள்வோமாக. கர்த்தாவே, நீர் தாமே இங்கிருந்து நாங்கள் எடுக்கும் இப்பாகத்திற்கான பொருளை தரவேண்டுமாய் நாங்கள் ஜெபிக்கிறோம். இது தாமே உமக்கு கனத்தைக் கொண்டு வருவதாக. உம்முடைய வார்த்தையின்பேரில் நாங்கள் இன்றிரவு காத்திருக்கையில் எங்களை ஆசீர்வதியும். வியாதியஸ்தரையும், அவதியுற்றோரையும் சுகப்படுத்தும், இழந்து போனவரை இரட்சியும், சரீரப்பூர்வமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் பெலவீனமுறும் பெலவீனப் பாண்டங்களுக்கு பெலத்தை அருளும். ஒரு மகத்தான உம்முடைய பிரசன்னத்தின் பொழிதலை எங்களுக்குத் தாரும். நாங்கள் இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

6 இப்பாகத்திலிருந்து *ஆவிக்குரிய நினைவிழப்பு* என்னும் பொருளை இன்றிரவு நான் எடுக்க வாஞ்சிக்கிறேன்.

7 வியாதியஸ்தர்களுக்கான ஜெபம் நாளை உள்ளது என்பதை மறவாதீர்கள். நாளை மதியம் இரண்டு மணிக்கு நாம் நம்முடைய ஆராதனையை துவக்கும் போது, கர்த்தர் தாமே அளவில்லாத மகத்தான காரியங்களை நடப்பிப்பார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஜெப அட்டைகளை வழங்க என்னுடைய பையன் இங்கே இருப்பான். ஜெபம் செய்யப்பட விரும்புவர் ஒவ்வொருவருக்கும்

ஜெபம் ஏறெடுக்கப்படும், நாளை கர்த்தருக்குள் மகத்தான ஒரு நேரத்தை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

8 இப்பொழுது நகர் புறத்திலிருந்து இங்கு வருகை புரிந்துள்ள ஜனங்களை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். முழு சுவிசேஷ, அருமையான சபைகள் இந்நகரம் முழுவதும் உள்ளன. அவைகள் எல்லாவற்றிலும் நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள்.

9 இப்பொழுதுதான் வெளியில் இருந்து உள்ளே வந்திருக்கும் என்னுடைய உதவிப் போதகர்களில் ஒருவராகிய சகோதரன் ஜாக்சனிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் முன்னாள் மெத்தோடிஸ்ட் சபையைச் சேர்ந்தவர். நம்மிடத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு நகரத்தூரம் தள்ளியிருக்கிறார்.

10 இக்கூடாரத்துடன் ஐக்கியப்பட்டிருக்கும் எத்தனைப்பேர் இங்குள்ளனர், உங்கள் கரங்களை நாங்கள் காணட்டும், எல்லாவிடங்களிலும். என்னே, நிச்சயமாக—நிச்சயமாக நீங்கள் இங்கு வந்திருப்பதில் நான் மகிழ்ச்சியுறுகிறேன். இந்தியானாவில் நான் சிறிது காலமாய் வரும்போது இருப்பதைக்காட்டிலும் இது ஒரு நெருங்கிய சந்திப்பாய் அமைந்துள்ளது. நான் மறுபடியும் சீக்கிரமாய் வந்து ஒரு கூடாரத்தை அமைத்து கர்த்தருக்கு சித்தமானால் அந்த ஏழு கடைசி எக்காளங்களை குறித்துப் பார்க்கலாம் என்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

11 ஆகையால், இப்பொழுது, ஆனால் நினைவிருக்கட்டும், அதை நாளை மறக்காதீர்கள். நாளை இரண்டு மணிக்கு, பிறகு நமது அடுத்த ஆராதனை டம்ப்பா, பிளாரிடாவில் அடுத்த வாரம் துவங்கும்.

12 இப்பொழுது *ஆவிக்குரிய நினைவிழ…நினைவிழப்பு* என்பதன் பேரில் நான் பேச விரும்புகிறேன்.

13 இப்பொழுது பேசப்போகும் இந்தப் பொருளுக்குச் செல்லும் முன்பு இதற்கு அடித்தளமாக சற்று நேரம் இந்த சிறிய நபராகிய ஆமோஸைக் குறித்துப் பேசுவோம். இது சமாரியாவிலே மிகவும் செழிப்பு இருந்த சமயத்தில் நிகழ்த்த ஒன்று. இஸ்ரவேல் செழிப்படைந்திருந்தாள். அவர்கள் உண்மையாகவே உலகத்தின் பின்சென்று செழிப்படைந்தார்கள்.

14 எப்பொழுதுமே செழுமையடைவது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான அடையாளம் அல்ல. ஆனால் அது சில சமயங்களில் முரண்பாடாயிருக்கும். நீங்கள் நிறைய உலகப் பொருட்களை உடையவராயிருப்பதால் தேவன் உன்னை ஆசீர்வதிப்பதை அது காண்பிக்கிறது என்று மக்கள் ஒருவேளை நினைக்கலாம். அது உண்மையல்ல. சில சமயங்களில் அது வேறு வழியில் இருக்கலாம்.

15 ஆனால் இச்சிறிய நபரைக் குறித்து நாம் அவ்வளவாய் அறிந்திருக்கவில்லை. அவன் எங்கிருந்து வந்தான் என்பதற்கான வரலாறு கூட நம்மிடம் கிடையாது. இங்கு வேதவசனத்தின்படி

அவன் ஒரு மந்தையை மேய்ப்பவன் என்று நான் அறிவோம். ஆனால் தேவன் அவனை எழுப்பியிருந்தார்.

16 அக்காலத்தில் உலகத்திலிருந்த, சுற்றுலாத் துறையிலே பிரசித்தி பெற்ற பட்டிணங்களில் ஒன்றாகிய சமாரியாவிலே ஒரு உஷ்ணமான நாளை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். மியாமி, அல்லது—அல்லது ஹாலிவுட், லாஸ் ஏஞ்சலிஸ் போன்ற சுற்றுலா பயணிகளுக்கு ஏற்ற மகத்தான நகரங்களில் ஒன்றாயிருந்த நகரங்களைப் போன்று அது அமைக்கப்பட்டிருந்தது. நாம் அவனைக் குறித்து சற்று கற்பனை செய்து பார்க்கலாம். அவன் அப்படிப்பட்ட ஒரு பட்டிணத்தில் ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் அவன் கர்த்தருடைய வார்த்தையை உடையவனாயிருந்து எப்பக்கத்திலும் பாவமானது குவிக்கப்பட்டிருந்த அந்த மகத்தான நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஊழியக்காரர்களெல்லாம் தேவனுடைய வார்த்தைய விட்டு முழுவதுமாக அகன்று சென்று விட்டிருந்தனர். நீண்ட வருடங்களாக அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசி இருக்கவில்லை.

17 ஆகையால் இந்த சிறிய நபர் சமாரியாவின் வடக்குப் புறமாக இருந்த மலையின் உச்சியில் ஏறினான். அவன் அந்தப் பட்டினத்தை கீழ்நோக்கிப் பார்க்கையில் உஷ்ணமான சூரியன் பிரகாசித்துக் கொண்டிருப்பதையும், அவனுடைய நரைத்த பெரு மீசையின் முடி முகத்தின் மேல் விழுகிறதையும், அவனுடைய சிறிய கண்கள் குறுகுகிறதையும், அவனுடைய சிறிய வழுக்கை தலையானது பிரகாசிப்பதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. அவனுடைய கண்கள் குறுகிவிட்டிருந்தன. சுற்றுலா பயணிகள் வழக்கமாக ஒரு பட்டிணத்திற்கு சென்று அதன் எல்லா வசீகரத்தையும் அழகையும் பார்ப்பதைப் போல அவன் அதைப் பார்க்கவில்லை. ஒரு காலத்தில் தேவனுடைய பட்டினமாய் இருந்த அது, ஒழுக்கச் சீர்கேட்டை அடைந்ததை அவன் பார்த்து கவனித்தான். வியப்பொன்றுமில்லை.

18 யாரும் அறியாத சிறிய நபராய் இந்த ஆமோஸ் தீர்க்கதரிசி இருந்தான். இப்பொழுது நாம் அவனைக் குறித்து மிக அதிகமாக அறிந்திருக்கவில்லை. அவன் எங்கிருந்து வந்தான் என்று நான் அறியோம். தீர்க்கதரிசிகள் வழக்கமாக யாரும் அறியாதவாறு காட்சியில் தோன்றி அப்படியே கடந்து செல்வார்கள். அவர்கள் எங்கிருந்து வருகின்றனர், எங்கு செல்கின்றனர் என்றும், அவர்களுடைய பின்னணிகள் நமக்கு தெரியாது. தேவன் அவர்களை எழுப்புகிறார். அவனிடம் காண்பதற்கு ஒன்றும் கிடையாது. ஆனால் அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை உடையவனாய் இருந்தான். நான் இதைத்தான் முக்கியமான ஒன்றாய் காண்கிறேன். உண்மையாகவே அவன் தன் ஊழியக்கூட்டத்தை துவக்குவதற்காகவே சமாரியவிற்கு வந்தான். யாரிடமிருந்தும் ஒத்துழைப்பைப் பெற்றிருக்கமாட்டான் என்று நான் நிச்சயிக்கிறேன். எந்த ஸ்தாபனத்திலிருந்தும் அவன்

ஐக்கியச் சீட்டை பெற்றிருக்கமாட்டான். எந்த குழுவிலிருந்து அவன் வந்துள்ளான் என்பதை காண்பிக்க அவனிடம் அறிமுகச் சான்று கடிதங்கள் இல்லை (credentials). ஆனால் அவன் ஒரு காரியத்தை உடையவனாயிருந்தான், அந்த பட்டினத்திற்கான கர்த்தருடைய வார்த்தையை அவன் உடையவனாயிருந்தான்.

19 இப்போது நாம் ஆமோஸை நம்முடைய நேரத்திற்கு கொண்டு வருவோமானால், இன்றைக்கு நம்முடைய பட்டிணத்தில் அவன் வரவேற்கப்படுவானா என்று நான் எதிர்பார்த்து ஆச்சரியப்படுகிறேன். நாம் அவனை வரவேற்போமா அல்லது அவர்கள் செய்ததுபோல செய்வோமா என்று நான் ஆச்சரியமுறுகிறேன். நம்முடைய பட்டிணங்களும் அதே போன்ற சீர்குலைவில்தான் உள்ளன என்று நாம் காண்கிறோம். அப்போது இருந்தவாறே பாவமும் மக்களிடையே பிரதானமாக இருப்பதை நாம் காணலாம். இந்த சிறிய, யாரும் அறியாத மனிதன் எப்படி இந்த கூட்டங்களை நடத்தப் போகிறான்? எப்படி, எங்கு அவன் ஆரம்பிக்கப் போகிறான்? எந்த சபைக்கு அவன் செல்லப் போகிறான்? யார் அவனுக்கு ஒத்துழைப்பு கொடுக்கப் போவது என்று நான் ஆச்சரியமுறுகிறேன். அவன் எங்கிருந்து வந்தவன் என்பதை காண்பிக்க அவனிடம் ஒன்றுமில்லை. அவனிடம் ஒன்றுமே கிடையாது. ஆனால் அந்த பட்டிணத்திற்கான **கர்த்தர் உரைக்கிறதாவது** அவனிடம் இருந்தது.

20 மிகவும் சீர்குலைந்த நிலையில் ஒழுக்கக் கேட்டில் அவர்களை அவன் கண்டான். அது ஒரு மகத்தான நேரமாயிருந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பது போல அப்பட்டிணத்திலுள்ள பெண்கள் ஆகத் துவங்கினர். அவர்கள் சீரழிந்த நிலையில் இருந்தனர். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒவ்வொரு காரியத்திலும் அவர்கள் வேறு வழியில் சென்றனர். ஆகவே அது ஒரு மகத்தான இடமாய் தெருக்களில் நடனங்களும், ஸ்திரீகள் தங்களுடைய உடைகளை களைவதும், ஆடை அவிழ்ப்பு போன்ற நிகழ்ச்சிகளும், இப்படி பல இருந்ததை நாம் கண்டறிகிறோம். உண்மையாகவே அந்த நாட்களில் அது ஒரு பொது களியாட்ட நிகழ்ச்சியாக இருந்தது. இப்பொழுதோ அது ஒவ்வொரு நாளும் உள்ளது. சீதோஷ்ண நிலை சற்று வெப்பமானால், நீங்கள் எந்த ஒரு காட்சிக்கும் செல்லத் தேவையில்லை. அவர்கள் யாவரும் எங்கும், எப்படியும் வீதியிலேயே உள்ளனர். இவ்விதமாய் செய்யும் பெண்களே உங்களுக்கு அவமானம்! உங்களைக் குறித்து நீங்கள் வெட்கமடையவில்லையா?

21 பிறகு சிறிது காலத்திற்கு முன்பாக இங்குள்ள ஒரு பெண்ணிடம் கூறினேன். அதற்கு அவள் “ஏன் சகோதரன் பிரான்ஹாமே மற்ற பெண்களைப் போலத்தானே” என்று கூறினாள்.

22 அதற்கு நான், “ஆனால் நாம் மற்ற ஜனங்களைப் போல் நடந்துகொள்ளக் கூடாது. நாம்

வித்தியாசமுள்ளவர்களாயிருக்கிறோம். நாம் ஒரு—ஒரு வித்தியாசமான குணாதிசயமுடையவர்களாயிருக்கிறோம்” என்றேன்.

23 ஒரு பெண் இப்படி கூறினது என் நினைவில் வருகிறது. “பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், நான்—நான்—நான் அந்த குட்டைகால் சட்டைகளை (shorts) அணிவதில்லை. நான் தளர்காற்சட்டைகளை (slacks) அணிகிறேன்” என்று கூறினாள்.

24 அப்பொழுது நான், “அது அதைவிட மோசமானது”, என்றேன். ஊ! “மேலும் தேவன், ஆண்களுக்கான ஆடைகளை பெண்கள் அணிவது ‘அது அவருடைய பார்வையில் அவருவருப்பானது’” என்று கூறினாரே. அது முற்றிலும் சரியே.

ஒருவர் “பாருங்கள், மற்ற ஆடைகளை அவர்கள் தயாரிப்பதில்லையே” என்று கூறினார்.

“இன்னும் தையல் இயந்திரங்களையும், மற்றவைகளையும் செய்கிறார்களே” என்றேன்.

25 இதற்கு சாக்குபோக்கு கிடையாது. இருதயத்தில் இருப்பதைத்தான் அது வெளியில் காண்பிக்கிறது. அது—அது தன்னைத்தானே அடையாளங் காண்பிக்கிறது.

26 இந்த பட்டிணமானது ஒழுக்கச்சீர்கேடு அடைந்தது என்று நாம் காணலாம். பிரசங்கிகளும் அதைக் குறித்து கூற பயந்தார்கள். ஆனால் அவர்களோ **கர்த்தர் உரைக்கிறதாவது**, “இந்த காரியத்தை அப்புறப்படுத்துங்கள். இல்லையேல் நீங்கள் சிறைப்பட்டு போவீர்கள்” என்று அவர்களிடம் கூற வருகின்ற, ஒரு சிறிய, வயதான மலையின் மேல் ஏறி வருகின்ற ஒரு மனிதனை உடையவர்களாய் இருந்தனர். பிறகு அவன், அவனுடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலின் நாள் மட்டும் உயிரோடிருந்து அதைக் கண்டான். மற்ற நாடுகளை ஆதரித்து புறம்பே தள்ளப்பட்ட இரண்டாம் யரோபெயாமின் நாட்களில் அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். இந்த சிறிய ஆமோஸ் “நீங்கள் ஆராதிக்கின்றதாக உரிமை பாராட்டும் அதே தேவன், உங்களை அழிப்பார்” என்று அவர்களிடம் தீர்க்கதரிசனமாய் உரைத்தான். அதை அவர் செய்தார்.

27 அவருடைய சத்தமானது பர்மிங்காமில் இன்றிரவு இங்கு இருக்குமானால், “நீங்கள் சேவிப்பதாக உரிமை கோரும் அதே தேவன் உங்களை ஒரு நாளில் அழிப்பார்” என்று அதே காரியத்தை சபைகளுக்கு கூறும். நான் இங்குள்ள இக்கூட்டத்தாரிடத்தில் மட்டும் பேசிக் கொண்டிருக்கவில்லை. இந்த ஒலிநாடாக்கள் உலகம் முழுவதும் செல்கின்றன. இப்பொழுது அது உண்மை என்பது நினைவிருக்கட்டும்.

28 அவன் பட்டிணத்திற்குள் பிரவேசித்தபோது இந்த காரியங்களைக் கண்டான். தேவனுடைய பிள்ளைகளுக்காக

அனுப்பப்பட்ட இவன், இவர்களின் சீர்கேட்டை கண்டபோது எப்படி உணர்ந்திருப்பான் என்று நான் ஆச்சரியமுறுகிறேன்.

29 அவன் வரும்போது நாம் அவனை வரவேற்போமா? அவனுக்கு ஒத்துழைப்பு அளிப்போமா? நம்மால் இயன்ற எல்லாவற்றையும் அவனுக்களிப்போமா? நம்முடைய கவனத்தை அவனிடம் செலுத்துவோமா? நாம் மனந்திரும்பி கர்த்தருடைய வார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்றும், கர்த்தர் என்ன செய்யச் சொல்கிறாரோ அதன்படி செய்ய வேண்டும் என்று அவன் கூறும்போது நாம் அதை செய்வோமா என்று நான் வியக்கிறேன்.

30 நம் சகோதரிகள் தங்களுடைய கத்தரிக்கப்பட்ட முடியைக் குறித்து என்ன செய்வார்கள் என்று நான் ஆச்சரியமுறுகிறேன்? ஆமோஸ் வருவானானால் தங்களுடைய முடியை வளர விடுவார்களா? அவன் அதை பிரசங்கித்திருப்பான் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அது கர்த்தருடைய வார்த்தையாகும்.

31 மூன்று அல்லது நான்கு முறை திருமணம் செய்து மூப்பர்களாக இருக்க முயலும் மூப்பர்களை நம்முடைய—நம்முடைய குழுமம் (Boards) நீக்குமா என்று நான்—நான் ஆச்சரியமுறுகிறேன். இந்த எல்லாக் காரியங்களும் அப்படியேயிருக்குமா என நான் வியப்புறுகிறேன். ஒரு மனிதன் தன் மனைவி குட்டைகால் சட்டைகளை (Shorts) அணிந்து கொள்ள அனுமதித்து, அவள் வெளியே தெருவில் சென்று ஒரு மனிதன் கடந்து செல்லும்போது, அவ்விடத்தையும் பேரழிவிற்குட்படுத்துவாளானால் அப்படிப்பட்ட அவள் கணவனான அந்த மனிதனிடத்தில் அவன் என்ன கூறியிருப்பான் என்று நான் வியப்புறுகிறேன்.

32 நிச்சயமாக தன்னிடமுள்ள எல்லாவற்றைக் கொண்டு அதைத் தகர்த்தெறிந்திருப்பான். ஏனெனில் அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை கொண்டிருந்தான். அதைத்தவிர மற்ற எதையும் அவனால் செய்ய முடியவில்லை. அந்நாளிலே அவர்கள் ஒரு மோசமான வியாதியைக் கொண்டவர்கள் என்று அவன் கண்டான். ஆவிக்குரிய நினைவிழப்பு. அதே காரியம்தான் இன்று நம்மிடையே உள்ளது.

33 இப்பொழுது, என்ன நடக்கப் போகிறதென்பதை அவன் எப்படி அறிந்து கொண்டான்? எப்படி ஆமோஸ் தெரிந்து கொண்டான்? முதலாவது அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். பிறகு அடுத்ததாக நோயாளிகளின் உடலில் ஏற்படும் வியாதியின் அறிகுறியை கண்டுபிடித்து (diagnoses) அது என்ன வியாதி என்பதை அறிந்து அதன் முடிவுகள் என்ன என்பதை அவன் அறிந்திருப்பான்.

34 ஒரு மருத்துவர் ஒரு நோயின் உக்கிரவேகத்தை கண்டு, அந்த வேகமாக தொற்றி பரவுகின்ற (malignant) அது ஸ்திரப்பட்ட பிறகு மரணம் தவிர வேறெதுவும் இல்லை என்பதை அறிவார். தேவன் அதைக் குறித்து ஏதாவது செய்தாலொழிய அது அவ்வளவுதான்.

35 பாருங்கள், நீங்கள் ஒரு பட்டிணத்தை நோக்கிப் பார்க்கையில், நீங்கள் ஜனங்களை பார்க்கையில், நீங்கள் ஒரு சபையைப் பார்க்கையில், தேவனை விட்டு தூரமாய் அகன்று சென்றிருக்கும் ஜனங்களை நோக்கிப் பார்க்கும்போது அங்கு பிணியாளிகளுடைய "பாவம்! பாவத்தின் சம்பளம் மரணம்!" என்ற நோயின் அறிகுறியைத் தவிர வேறெதுவும் இல்லை. அது மரிக்கிறது. அவர்களின் வியாதியின் அறிகுறி என்ன என்பதை அது நிரூபிக்கிறது. நீங்கள் பாருங்கள், ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை விட்டு அகன்று தேவனுடைய வார்த்தையைக் கேட்காமல் வார்த்தையைக் குறித்த வாஞ்சையற்றவர்களாய்ப் போனால் அப்பொழுது அதைக் குறித்த ஒரு நோயின் அறிகுறி உள்ளது. "'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்' என்பதேயாகும். அவிசுவாசம் உங்களை தேவனிடத்திலிருந்து பிரித்துவிடும்." அது முற்றிலும் சரியே.

36 ஆகையால் பாவத்தின் வியாதி அப்பட்டிணத்தில் இருப்பதை அவன் கண்டபோது அது என்ன வியாதி என்றும், அதன் பலன் என்ன என்றும் அவன் அறிந்து கொண்டான்.

37 இப்பொழுது இந்த நினைவிழப்பு என்னும் வியாதியானது (Amnesia) நீங்கள் உங்களைத்தானே அடையாளங் கண்டு கொள்ள முடியாத ஒரு நிலைக்கு உங்களை கொண்டு செல்லும் என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. இப்பொழுது இது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும். இது அடிக்கடி நிகழாது. ஒரு அதிர்ச்சியின் விளைவாகவே இது நிகழ்கிறது. யாரோ ஒருவர் தான் யார் என்பதை அறியாதிருப்பார். அது யுத்தங்களில் இருப்பதை நாம் காணலாம். சில சமயங்களில் இராணுவ வீரர்களுக்கு அது வரும். சில சமயங்களில் மக்களுக்கு அது வரும். இந்த நோய் வரக் காரணமாயிருக்கும் மற்றொரு காரியம் கவலையாகும். கவலையே அதைப் பிறப்பிக்கும்.

38 கவலையினால் எந்த நன்மைகளும் கிடையாது. ஆம், கவலையை கடந்து விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

39 யாரோ ஒருவர், "பாருங்கள், நீர் காலையில் சுட்டுத் தள்ளப்பட்டப் போகிறீர் என்றால் அதைக்குறித்து நீர் கவலை கொள்ளமாட்டீரா?" என்று கேட்டார்.

அதற்கு நான் "இல்லை. அப்படி இருக்காது என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினேன்.

"ஏன்?"

நான் "கவலை நிலைமையை மோசமாக்குமே தவிர வேறொன்றையும் செய்ய முடியாது" என்றேன்.

அதற்கு அவர், "பாருங்கள், விசுவாசம் வைத்திருத்தல் என்ன நன்மை செய்யப் போகின்றது?" என்று கேட்டார்.

அப்பொழுது நான், "அது என்ன விடுவிக்கும்" என்றேன். அது சரி. பாருங்கள்.

40 ஆகையால் கவலை எந்த நன்மையையும் உடையதாய் இல்லை, ஆனால் விசுவாசம் எல்லா வல்லமைகளையும் உடையதாய் உள்ளது. விசுவாசியுங்கள்!

இப்பொழுது சில சமயத்தில் கவலையே அதற்குக் காரணமாக அமைகிறது.

41 இரண்டு கருத்துக்களுக்கு நடுவே இருப்பது இந்த நினைவிழப்பை மக்களிடையே பிறப்பிக்கும் மற்றொரு காரியமாகும். அது உன்னை, நீ என்ன செய்தாய் என்ற உன்னுடைய சிந்தையையே மறக்கச் செய்யும் நிலைக்கு உன்னை உண்மையாகவே கொண்டு செல்லும். உன்னுடைய சிந்தையை நீ மறந்திருப்பாய். நீ... நீ யார் என்பது உனக்கே தெரியாது. உன்னையே நீ அடையாளம் கண்டு கொள்ள முடியாது. நீ நடக்கலாம், புசிக்கலாம், இன்னும் மற்ற காரியங்களைச் செய்யலாம். ஆனால் இன்னுமாய் உன்னைத்தானே நீ அடையாளம் கண்டு கொள்ள முடியாது. நீ மிகவும் அறிவார்ந்த படிப்பை உடையவனாய் இருக்கலாம். ஆனால் நீ பெற்ற அதே கல்வி எங்கிருந்து வந்தது என்பதையும், நீ யார் என்பதையும், நீ எதைச் சேர்ந்தவன் என்பதையும் உனக்குத் தெரிவிக்காது. இது தான் நினைவிழப்பு என்று நமக்கு கூறப்பட்டுள்ளது.

42 இந்த மனித ஜீவியத்தில், விவாகத்தினால் நம்முடைய குடும்பங்கள் மூலம் நாம் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறோம். நாம் விவாகம் செய்து, நம்முடைய மனைவிகள் நம்—நம்—நம் விவாக இணைப்பின் மூலம் நம்முடைய குடும்பம் அடையாளங் கண்டுகொள்ளப்படுகின்றது. ஆனால் அதன்பின் இந்த பயங்கரமான காரியம் உனக்கு நேர்ந்து, நீ விவாகமானவனா என்றும், யார் உன் மனைவி என்றும், எது உன் பிள்ளைகள் என்றும், உன்னுடைய தகப்பன் தாய் யார் என்றும், உன்னுடைய அயலான் யார் என்றும், உன்னால் நினைவில் கொள்ள முடியாமல் இருக்குமானால் எப்படி இருக்கும்? அது ஒரு—ஒரு பயங்கரமான காரியமாக இருக்கும்.

43 நாம் நம்மை ஞானத்தின் மூலம் மனித குலத்தை மிருக இனத்திலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காண்பிக்க முடிகிறது. ஒரு மிருகத்தினால் சிந்திக்க முடியாது. அது சத்தங்களின் மூலமாகவே செல்லும். அதற்கு ஆத்துமா கிடையாது. ஆனால் நாமும் மிருக ஜீவன்தான். ஆனால் எது நம்மை வித்தியாசப்படுத்துகிறது?...நாம் பாலூட்டி வகையைச் சேர்ந்தவர்கள். ஒரு பாலூட்டி வெப்பமான இரத்தத்தை உடைய ஒரு மிருகம். நாமும் ஒரு மிருகத்தின் தன்மைக் கேற்றவாறு அமைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் எது நம்மை வித்தியாசப்படுத்துகிறது? நமக்கு ஒரு ஆத்துமா, எது தவறு எது சரி என்று கூறும் ஒரு மனசாட்சி இருப்பதன் மூலம் நாம் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறோம்.

44 இப்பொழுது ஒரு நிலை உண்டு, அதாவது இந்த நினைவிழப்பு உனக்கு வருமானால் நீ நேபுகாத்நேச்சாரைப் போல ஆகலாம்.

அவன் ஒரு சமயம் தன்னைத் தானே உயர்த்தினான். அவன் தான் ஒரு மிருகம் என்று நினைக்கும்படி தேவன் விட்டுவிட்டார். அவன் வனாந்திரத்திலே ஜீவித்து மாட்டைப் போல புல்லைத் தின்றான். கழுகின் சிறகுகளைப் போல அவன் உடல் முழுவதும் முடி வளர்ந்தது. ஒரு மிருகத்தின் இருதயம் அவனுக்குள் இருந்தது போன்று அவன் ஆனான். பாருங்கள்? அதுதான் நினைவிழப்பு. ஏனென்றால், அவன் ஒரு ராஜாவாயிருந்தான் என்பதை அவன் மறந்து விட்டிருந்தான். அவன் ஒரு மனிதனாயிருந்தான் என்பதை அவன் மறந்துவிட்டிருந்தான். தன்னை ஒரு மிருகமாக நினைத்து மிருகத்தைப் போல நடந்து கொண்டான். ஏனெனில் ஒரு மனிதன் என்பதை அவன் மறந்து போயிருந்தான்.

45 அது இன்றைக்கு சுலபமாயிருக்கிறது. கிறிஸ்தவ சபை என்ன என்பதை நாம் சில சமயங்களில் மறந்துபோகிறோம். நாம் உலகத்தாரைப் போல நடக்கின்றோம். அது நாம் ஆவிக்குரிய நினைவிழப்பை பெற்றிருப்பதை நமக்கு காண்பிக்கிறது. ஏனென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவனைப் போல நடக்காமல் உலகத்தாரைப் போல நடக்கிறீர்கள். நீங்கள் உலகத்தின் இருதயத்தை பெற்றுக்கொள்கிறீர்கள். அதுவே இதைப் பிறப்பிக்கிறது.

46 இஸ்ரவேலானது உலகத்திற்கு திறக்கப்பட்டு இப்பள்ளத்தில் விழுந்து போனதை இங்கே நாம்—இங்கே நாம் காணலாம். ஆகையால் இத்தீர்க்கதரிசியானவன் அவர்களை வெளியே தோண்டி எடுத்து, முடிந்தவரை அவர்களுக்கு போதகம் செய்ய அனுப்பப்பட்டான். தேவன் தம்முடைய கிருபையால் இஸ்ரவேலை பூமியில் இருந்த மற்ற குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுத்தார். கிருபை அதைச் செய்தது. அவர்கள் விருப்பப்பட்ட நிலங்களை அவர் அவர்களுக்கு அளித்தார். அவர்கள் ஒருபோதும் கட்டாத வீடுகளை அவர் அவர்களுக்கு அளித்தார். அவர்கள் வாங்காத பண்ணைகளை அவர் அவர்களுக்கு கொடுத்தார். அவர்—அவர் அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஒருபோதும் பயிரிடாத ஆகாரத்தை அவர் அவர்களுக்கு அளித்தார். அவர்கள் தோண்டாத கிணறுகளை அவர் அவர்களுக்கு அளித்தார். அவர்கள் வென்றிராத வெற்றிகளை அவர் அவர்களுக்கு அளித்தார். தகுதியே இல்லாத அவர்களுக்கு அவர் கிருபையால் இவைகளைச் செய்தார். அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட, அவருடைய நேசிக்கப்பட்ட, இந்த ஜனமாகிய இஸ்ரவேலுக்கு தமது கிருபையால் தேவன் இதைச் செய்தார்.

47 அவர் வேதத்தில், “ஒரு நிலத்தில் சிறு பெண்ணாக தன்னுடைய சொந்த இரத்தத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதாக அவளைக் கண்டார். அவர் அவளைக் கழுவி சுத்தம் செய்தார். ஆனால் தேவன் தன்னுடைய இரக்கத்தையெல்லாம் அவளுக்கு பாராட்டின பிறகு, அவள் ஐசுவரியமுள்ளவளானாள்”, என்று கூறியுள்ளார். அவளுக்கு நினைவிழப்பு வியாதி வந்தது, நினைவிழப்பு, “ஆகையால்

இவையெல்லாம் எங்கிருந்து வந்தன என்பதை அவள் மறந்து போனாள்.”

48 1964-ம் ஆண்டில் உள்ள அமெரிக்காவை இது சித்தரித்துக் காண்பிக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதே வியாதியினால் அது பீடிக்கப்பட்டு அவதியுறுகிறது. நாம் மகத்தான வல்லமை பொருந்திய சபைகளாயிருக்கிறோம். நாம் மகத்தான வல்லமையான மக்கள், நாம் எண்ணிக்கையில் இலட்சக்கணக்கான தொகையை உடைய மக்கள். இருப்பினும் இது எங்கேயிருந்து வந்த ஒன்று என்பதை நாம் மறந்து போய்விட்டோம்.

49 அவர்களுக்கு அது மோசமான நிகழ்வாயிருந்தது. தேவன் அவர்களிடம் நல்லவராயிருந்து, எல்லா அஞ்ஞான தேசங்களிலிருந்து அவர்களைக் கொண்டு வந்து, அவர்களை வேறு பிரிக்கப்பட்ட ஜனங்களாக்கி அவர்களை தமக்கென்று வேறுபிரித்துக் கொண்டார். “அவர் ஒரு திராட்சை செடியை வேறொரு தேசத்திலிருந்து எடுத்து அதை வேறொரு தேசத்தில் நட்டார். அது அழகாக வளர்ந்து கனி தரும்படி செய்தார். ஆனால் அந்த திராட்சை செடி தனக்கு வந்த ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வந்தது என்பதை மறந்து போனது” என்று அவர் கூறினார்.

50 அதே போன்று தான் இந்த கடைசி நாட்களில் ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதின் சாட்சியின் அர்த்தம் என்ன என்பதை தேவனுடைய ஜனங்கள் மறந்து போய் உள்ளனர். இந்த நினைவிழப்பானது மறுபடியுமாக மக்களின் மேல் வந்துள்ளது. அவர்களால் தங்களையே அடையாளங் கண்டு கொள்ளமுடியவில்லை.

51 அதைக் குறித்த எல்லாவற்றையுமே அவர்கள் மறந்தனர். அவருடைய பரிசுத்தத்தை அவர்கள் மறந்தனர். அவருடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் மறந்தனர். ஸ்திரீகளோ மற்ற ஸ்திரீகளைப் போன்று வாழ்ந்துகொண்டிருந்தனர்.

52 தேவனுடைய சபையும் அவருடைய மக்களும் எப்போதும் “வேறுபிரிக்கப்பட்ட, வெளியே அழைக்கப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும். பரிசுத்த ஜாதியாயும் தங்களுடைய உதடுகளின் கனிகளாலே ஸ்தோத்திர பலிகளை அவருடைய நாமத்திற்கு செலுத்துகிறவர்களாயும் இருப்பார்கள்.” தேவன் அவருடைய சபையை அழைத்து, இந்த காரணத்திற்காகத்தான் உலகத்திலிருந்து அதை வேறு பிரித்தார். அதற்கு ஒரு நியாயப்பிரமாணத்தை அளித்தார். அவர் அது பரிசுத்தமாயிருக்க வேண்டும். அவர், “நான் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் பரிசுத்தராயிருங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே” என்று கூறினார். தேவன் தாமே அதைக் கூறினார்.

53 இதைப்போன்று தான் இம்மக்கள் இருக்க வேண்டுமென்று அவர்களை அவர் அழைத்தார். ஆனால் அதைக் குறித்து அவர்கள் மறந்து போனார்கள். அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தை மறந்தார்கள். அவர்கள் தங்களுடைய நெறிமுறைகளை மறந்தார்கள். வீதியில் இருந்த பெண்கள், அங்கிருந்த இஸ்ரவேல் ஸ்திரீகள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு மேசியாவை பிறப்பிப்பதற்காக காத்து கொண்டிருந்தனர், அதைப் போன்று செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுடைய குணாதிசயமானது பயங்கரமாயிருந்தது.

54 இங்கு நான் ஒரு நிமிடம் நிறுத்தி அதே போன்றுதான் இன்று கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் நம் மக்களின் மத்தியிலும் உள்ளது என்று கூறவிரும்புகிறேன். நீங்கள் மாத்திரம் அவர்கள் குணாதிசயத்தை உணர்ந்து கொள்வீர்களேயானால் நலமாயிருக்குமே!

55 ஒரு சமயம் தெற்கில் நடந்த சம்பவம். அவர்கள் அடிமைகளை வைத்திருந்தபோது சம்பவித்த ஒரு கதையை நான் படித்தேன். அவர்கள் அம்மக்களை கொண்டுபோய் சந்தைகளிலே விற்பார்கள். நீங்கள் ஒரு உபயோகிக்கப்பட்ட காரை விற்பது போல. அங்கு ஒரு தரகர், வாங்குபவர் வந்து இந்த அடிமைகளை எடுத்து அவர்களை வியாபாரம் செய்வார். நீங்கள் எப்படி ஒரு காரையோ அல்லது வேறெதையோச் செய்வது போல.

56 அந்த அடிமைகள் தங்கள் தேசத்தை விட்டு வெளியே இருப்பவர்கள். அவர்கள் ஆப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள் ஆவர். தென்னாப்பிரிக்க டச்சுக்காரர்கள் (Boers) அவர்களைக் கடத்தி இங்கு உள்ள தீவுகளுக்கு அவர்களைக் கொண்டு வந்து ஜமைக்கா மற்றும் பிற இடத்திலிருந்து ஐக்கிய நாடுகளுக்குக்குள்ளாக கள்ளத்தனமாக கொண்டுவந்து அடிமைகளாக விற்றனர்.

57 இம்மக்கள் கவலை கொண்டவர்களாய் இருந்தனர் என்று நாம் காணலாம். ஏனெனில் அவர்கள் தங்கள் சொந்த வீட்டிலிருந்து கடத்தப்பட்டனர். அவர்கள் எதிரியால் வெளியே கொண்டு வரப்பட்டதால் வருத்தமாய் இருந்தனர். அவர்கள் மறுபடியும், தங்கள் கணவரையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, தங்களுடைய தாய் தந்தையரையோ காண முடியாது. அவர்கள் முற்றிலுமாக…அவர்களை வேலை செய்ய வைப்பதற்கென சாட்டையால் அடித்தனர். அவர்கள் கவலை கொண்ட ஜனங்களாய் இருந்தனர்.

58 ஒரு நாள், தரகன் ஒரு தோட்டத்திற்கு வந்து அங்கு வெளியில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு கூட்டம் அடிமைகளைக் கண்டான். ஆதலால் அவன் சென்று எஜமானனை நோக்கி “எத்தனை அடிமைகளை நீர் வைத்திருக்கிறீர்?” என்று கேட்டான்.

எஜமானோ கிட்டத்தட்ட “நூறு இருக்கலாம்” என்றான்.

பின்னர் தரகனோ, "விற்கவோ அல்லது மாற்றிக்கொள்ளவோ உம்மிடம் யாராவது உள்ளனரா?" என்று கேட்டான்.

எஜமான், "ஆம்" என்றான்.

அப்பொழுது தரகர், "நான் அவர்களைப் பார்க்கட்டும்" என்றான்.

59 ஆகவே அவன் வயல்வெளியில் சென்று அவர்களை கவனித்தான். அவர்கள் சாட்டையால் அடிக்கப்பட வேண்டும் என்பதை அவன் பார்த்தான். சிறிது நேரம் கழித்து இவர்கள் சாட்டையால் அடிக்க தேவையில்லாத ஒரு வாலிபனைக் கண்டான். இவன் தன் நெஞ்சையும், தன் முகத்தையும் நிமிர்த்தி நின்றவனாய் இருந்தான். அவன் அடிக்கபட வேண்டியதில்லை. ஆதலால் அந்த தரகன் "நான் அந்த அடிமையை வாங்க விரும்புகிறேன்" என்றான்.

அதற்கு எஜமான் "அவன் விற்பனைக்கு அல்ல" என்றான்.

60 அப்பொழுது தரகன், "சரி, அந்த அடிமையின் வித்தியாசத்தனம் என்ன? மற்ற எல்லாருக்கும் அவன் தலைவனா?" என்று கேட்டான்.

அதற்கு எஜமானன் "இல்லை, அவனும் ஒரு அடிமைதான்" என்றான்.

அதற்கு தரகனோ, "நல்லது. அவனை வேறு விதமாக போஷிக்கின்றீரா?" என்று கேட்டான்.

அப்பொழுது எஜமானோ, "இல்லையே, மற்ற எல்லா அடிமைகளோடும் தாழ்வான தளத்தில் தான் அவன் சாப்பிடுகிறான்" என்றான்.

61 அதற்கு தரகனோ, "நல்லது, மற்ற அடிமைகளிலிருந்து அவனை வித்தியாசப்படுத்துகிறது எது?" என்று கேட்டான்.

62 அப்பொழுது எஜமான், "பாருங்கள், நானும் இதைப்பற்றி நீண்ட நாளாக ஆச்சரியப்பட்டிருந்தேன். ஆனால் ஒரு நாள் நான் அறிந்து கொண்டேன். அதாவது அவன் விட்டு வந்திருக்கிற அவனுடைய தாய்நாட்டிலே ஒரு இனமரபு குழுவிற்கு அவனுடைய தந்தை தான் ராஜாவாக இருக்கிறாராம். ஆனாலும் இவன் வீட்டிற்கு வெளியே இருந்தாலும், அன்னிய இடத்திலே இருந்தாலும் தான் ஒரு ராஜாவின் குமாரன் என்று அவன் அறிந்திருக்கிறான். தன்னை—தன்னை ஒரு ராஜாவின் குமாரனைப் போன்று நடத்திக் கொள்கிறான்" என்று கூறினான்.

63 அப்பொழுது நான், "ஆனாலும் ஆப்பிரிக்காவிலிருந்து வருகின்ற ஒரு கறுப்பு இன மனிதன் தன் தகப்பன் ஒரு இனமரபு குழுவிற்கு ராஜாவாயிருக்கிறான் என்று அறிந்திருப்பானானால், ஒரு மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன், ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ நம்முடைய பிதாதான் மகிமையிலுள்ள பரலோகத்தின் இராஜா என்பதை அறிந்து எப்படி இருக்க வேண்டும்" என்று எண்ணினேன். நாம் நம்மை கிறிஸ்தவ புருஷர்களாக, ஸ்திரீகளாக நடத்திக் கொள்ள வேண்டும்! நாம் அதைப் போன்று நடக்க

அதைப்போன்று உடையுடுத்திக்கொள்ள, அதைப்போல பேச, அதைப்போல ஜீவிக்க வேண்டும். நாம் அந்நியராயிருந்தாலும் நாம் ராஜாவின் பிள்ளைகளாய் இருக்கிறோம். ஆமென்.

64 நம்முடைய குணாதிசயம், இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற நாட்களில் உள்ள ஒழுக்கச் சிதைவு. இஸ்ரவேலானது அதே குழியில் விழுந்து, அவர்களும் கூட ஒழுக்கக் கேடாயிருந்தனர். அவர்கள் “விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக” இன்னும் மற்றைய தேவனுடைய பிரமாணங்களை மறந்துவிட்டிருந்தனர். அவர்கள் அந்த பிரமாணங்களை மறந்துவிட்டிருந்தனர். அது இனிமேல் அவர்களுக்குத்—அவர்களுக்குத் தேவையில்லை. எப்படி சபையானது இப்பொழுது இருக்கின்றதோ அதேபோன்று அவர்கள்—அவர்கள் மற்ற உலகத்தாரைப் போன்று வாழ விரும்பினர்.

65 ஒரு சமயம் இஸ்ரவேலர் தங்களுக்கு அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாகிய சாமுவேலை நோக்கி தங்களுக்கு ஒரு ராஜா தேவை என கேட்க அப்பொழுது ஆரம்பித்தனர். அப்பொழுது சாமுவேல் அவர்களிடம், “இப்பொழுது கர்த்தருடைய நாமத்தில் நான் கூறின காரியம் ஏதாகிலும் நிறைவேறாமல் போனதுண்டா?” என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் “இல்லை நீர் கூறினது நிறைவேறாமலிருக்கவில்லை” என்றனர்.

66 மேலும் அவன், “என்னுடைய ஆகாரத்திற்காக, பணத்திற்காக, உங்கள் பணத்திற்காக, ஜீவனம் செய்வதற்காக உங்களிடம் நான் மன்றாடியிருக்கிறேனா?” என்று கேட்டான்.

67 அதற்கு அவர்கள், “இல்லை, நீர் அவ்வாறு செய்திருக்கவில்லை. நிகழாத காரியங்களை ஒன்றையும் நீர் எங்களுக்கு உரைக்கவில்லை, சாமுவேலே, நீர் உமது ஜீவனத்திற்காக எங்கள் பணத்தை ஒருபோதும் கேட்கவில்லை, ஆனால் எப்படியாயினும் எங்களுக்கு ஒரு ராஜா தேவை” என்றனர்.

68 தேவன் சாமுவேலிடம் “அவர்கள் அவனை பெற்றுக் கொள்ளட்டும், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை. நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்” என்றனர்.

69 இஸ்ரவேலர் அதைப் போன்றுதான் இப்பொழுதும் ஆகிவிட்டனர். அவர்களுக்கு இனி தேவனுடைய தீர்க்கதரிசிகள் தேவையாயிருக்கவில்லை. அவர்களுக்கு தீர்க்கதரிசிகள் தேவையில்லை. யாராவது ஒருவன் வந்து, அவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வந்து, அவர்களை மறுபடியுமாக தேவனுடைய வார்த்தைக்கு திரும்பக் கொண்டு வர முயற்சித்தால், அவர்கள் அதைப் புறக்கணிப்பார்கள். அப்பேற்பட்ட சீர்கேட்டின் மூலம் அதை அவர்கள் எப்பொழுதும் செய்வர்.

70 உலகமும் சபையும் ஒன்றாக இணையும்போது ஆவிக்குரிய ஒன்று ஒருபோதும் அவர்களுக்கு தேவைப்படாது. **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதும் அவர்களுக்கு தேவையில்லை. அவர்கள் விருப்பமே அவர்கள் தேவையாயிருந்தது. அவர்களுக்கு உலகம் தேவையாயிருந்தது. தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு, உலகத்தில் அவர்கள் வாழ்ந்து உலகத்தாருடனும், உலகத்தாரைப் போலவும் வாழ்ந்து இன்னுமாய் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை செய்ய விரும்பினர். அதைக் குறித்த காரியத்தை நீங்கள் அறிவீர்கள். அது தான் ஆவிக்குரிய நினைவிழப்பாகும். சரியாக அது தான். தாங்கள் யார் என்பதே அவர்களுக்கு தெரியாது. தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் மறந்து போனார்கள்.

71 அதைப் போன்ற ஒன்று இன்றைக்கு வருமானால், அது அப்படியே புறக்கணிக்கப்படும். அவர்கள் மோசமான நிலையில் இருந்தவர்களாய் காணப்பட்டனர். ஆகவே இன்றைக்கும் அதே போன்று தான் இருக்கின்றனர். அவர்களால் இயற்கைக்கு மேம்பட்ட காரியங்களால் ஒருபோதும் அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு அது தேவையில்லை. வார்த்தை. சுவிசேஷம் அவர்களுக்குத் தேவையில்லை. பாவ நோயானது அவர்களை பாதித்துள்ளது. அதை அவர்களே விரும்பினர்.

72 மனமாற்றமடையாத ஒரு இருதயத்திற்கு பாவமானது மகிழ்ச்சி அளிக்கின்ற ஒன்றாய் இருக்கும். மனமாற்றமடையாத மனதிற்கு அது அருமையானதாக இருக்கும். ஆனால் அது மரணத்திற்குரிய வழியாகும். மரணத்தைத்தவிர வேறொன்றும் மீதம் இருக்காது. “பாவத்தின் சம்பளம் மரணம்”. ஆகவே பாவங்களின் சம்பளமாகிய அறுவடையை நீங்கள் செய்தாக வேண்டும். நீங்கள் காற்றை விதைத்தீர்கள். இப்பொழுது சூறைக்காற்றை அறுக்கிறீர்கள்.

73 தேவனிடத்திலிருந்து நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்ட தூதனுடைய பிரசங்கமும். ஆவிக்குரிய அடையாளங்களும் இனியும் அவர்களை எழுச்சியடையச் செய்யாது. ஸ்திரீகளும் அவர்கள் முகத்திற்கு நேராக நகைத்து, “அதைப் போன்ற காரியத்தை நான் சென்று கேட்கத் தேவை இல்லை” என்று கூறக்கூடும். அது மறுபடியுமாக நிகழ்ந்திருக்கவில்லையென்றால், இது என்ன? ஆவிக்குரிய நினைவிழப்பு, சரியாக அதுதான். தேவனும் அவருடைய வார்த்தையும் ஒன்றுதான் என்றும், அதை அவர் மாற்றமுடியாது என்றும் அவர்கள் மறந்து போய் விட்டனர்.

74 அவர்கள் நாட்களில் ஒரு தீர்க்கதரிசி காட்சியில் எழும்பி அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய அடையாளம், ஒரு ஆவிக்குரிய சத்தத்தை அருளி, அதன்பின் அவர்களுக்கு தேவனுடைய சத்தத்தை கொடுத்தால் அவர்கள் அதை நகைத்து, அதைக் குறித்து ஏளனம் மாத்திரமே செய்வார்கள்.

75 “தேவ தூதர்களும் செல்ல பயந்துள்ள இடத்திற்கு முட்டாள்கள் பெருந்தலை ஆணிகள் கொண்ட காலணிகளை அணிந்து செல்வர்” என்ற ஒரு பழைய பழமொழியை நீங்கள் அறிவீர்கள். அதைத்தான் இந்த ஆவிக்குரிய நினைவிழப்பு செய்கிறது. இது ஜனங்கள் தங்கள் உள்ளுணர்வை மறக்கும் ஒரு நிலைமைக்கு கொண்டு செல்கின்றது. ஆவிக்குரியப் பிரகாரமான எதுவும் அவர்களுக்கு தேவையாய் இருக்கவில்லை.

76 ஒரு உண்மையான ஆவிக்குரிய கூட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு பரிசுத்த ஆவியானவர் வியாதியஸ்தரை சுகப்படுத்தி, இருதயத்தின் ரகசியங்களைப் பகுத்தறிந்து, அங்குள்ள அரங்கத்தில் எல்லா சபைகளும் கூடியிருக்கும் போது, அந்த மாபெரும் கூட்டத்தில் இவைகளைச் செய்வாரானால் என்ன நடக்கும். சில நிமிடங்களில் எல்லோரும் எழுந்து வெளியில் சென்று விடுவார்கள். அவர்கள் அதனோடு ஏதும் செய்யவிரும்புவதில்லை. அதனுடன் எதுவும் செய்ய அவர்களுக்கு விருப்பம் இராது. ஏதாவது ஒரு அறிவுத் திறமையுடையவர் பேச்சைத்தான் கேட்பார்கள்.

77 ஆனால் இயேசு கிறிஸ்துவினுடைய வல்லமை. அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவி என்னும் காரியங்களுக்கு வரும்போது, அதனுடன் ஒன்றும் செய்ய அவர்களுக்கு விருப்பமிராது. ஏனென்றால் அது அவர்களை கண்டனம் செய்கிறது. அது அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய காரியங்களுடன் கூட சேர்ந்து அவர்களைத் தீ மூட்டும். உண்மையாகவே கண்டித்து உணர்த்துதலே இல்லாதது அந்த குறிப்பிட்ட காலத்திற்கு மகிழ்ச்சி தருவதாய் இருக்கும். ஆனால் நீங்கள் அதற்கு உங்களை கீழ்ப்படுத்துவீர்களேயானால் அது உங்களுக்கு மனந்திரும்புதலின் கனிகளைத் தரும். ஆகவே இந்த ஆவிக்குரிய நினைவிழப்பானது மக்களை பீடிக்குமானால் அவர்கள்—அவர்கள் மோசமான நிலையை அடைவார்கள் என்று நான் காணலாம். நாம் இப்பொழுதும் அதையே கண்டறிகிறோம். இப்பொழுது நான் விரும்புவது…

78 நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். எங்கேயாவது நீங்கள் அதை காண்பிக்க வேண்டும். இன்றிரவு நீங்கள் எங்கு அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றீர்கள் என்பதை உங்களுடைய ஜீவியம் காண்பிக்கிறது. கிறிஸ்துவிற்கு உள்ளே அல்லது கிறிஸ்துவிற்கு வெளியே அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். நீங்கள் பாதிவழிகொண்ட மனிதராக இருக்க வேண்டாம். ஒரு குடிகாரனாகவும், தெளிந்தவனாகவும் ஒரேசமயத்தில் ஒருவன் இருக்க முடியாது. கறுப்பு வெள்ளை பறவை என்பது கிடையாது. நீங்கள் ஒன்று இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இரட்சிக்கப்படாமல் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு பரிசுத்தவானாக அல்லது பாவியாக இருக்க வேண்டும். ஒன்று அல்லது மற்றொன்றாக இருக்க வேண்டும். ஆகவே தேவனுடைய வார்த்தையைக் குறித்த உங்களுடைய ஆவிக்குரிய மனப்பான்மை

நீங்கள் எங்கு சரியாக எங்கு நின்றுகொண்டிருக்கிறீர்கள் என்று உங்களை அடையாளம் காண்பிக்கிறது. உண்மையே!

79 அன்று பெந்தேகொஸ்தே நாளிலும் அல்லது வேறொரு சமயத்திலும் பரிசுத்த ஆவி விழுந்த முதற்கொண்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இப்பொழுதும் அதேதான் என்பதை தேவனுடைய வார்த்தை ரூபகாரப்படுத்தி நிரூபித்தது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இதைக் குறித்து உங்களுடைய மனப்பான்மை நீங்கள் ஆவிக்குரிய நினைவிழப்பு கொண்டவரா அல்லது இல்லையா என்பதை அடையாளம் காண்பிக்கிறது. அது உண்மை. நீங்கள் ஒரு மூப்பனாகவோ, அல்லது பிரசங்கியாகவோ இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அது ஒரு…ஆம் அவர்களும்கூட அதை பெற்றுக்கொள்வார்கள். ஆகவே அது தொற்றும் தன்மை கொண்டது என்றும், முழுவதையும் தாக்கும் என்றும் நாம் காணலாம். இப்பொழுது நாம் கவனிப்போம்.

80 இப்பொழுது ஒரு அமெரிக்கனாயிருக்க, ஒரு அமெரிக்கனாய் இருக்க, நான் என் தேசத்துடனே அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். நான் பிறந்திருக்கும் இந்த தேசத்தில் இங்கே ஒரு அமெரிக்கனாக இருக்க, நான் ஒரு குடிமகனாகி இத்தேசத்தோடு அடையாளங் கண்டுகொள்ளப்படுகிறேன். அதன் எல்லாவற்றிலும் நான் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன். அது இருந்து வருகிற யாவற்றோடும் நான் அடையாளங்கண்டுகொள்ளப்படுகிறேன். ஆகவே நான் ஒரு அமெரிக்கனாக அடையாளங்கண்டு கொள்ளப்படுவதால் அதன் எல்லா அவமானத்தையும், அதினுடைய எல்லா மகிமையும் நான் பெற்றுக் கொள்ள வேண்டும். அது எதுவாயிருந்தாலும், நானும் அப்படியே, ஏனென்றால் நான் அதனுடன் அடையாளங் கண்டு கொள்ளப்படுகிறேன், ஆமென். இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் ஒரு அமெரிக்க குடிமகனாக அடையாளம் கண்டுகொள்வதால், அது எப்படியோ, நானும் அப்படியே, அதனுடைய எல்லாமுமாக நான் இருக்கிறேன். நான் அதனுடைய பாகமாயிருக்க வேண்டும். நான்…நான் ஒரு அமெரிக்க குடிமகன். நான் அமெரிக்காவின் ஒரு பாகமாக இருக்க வேண்டும். ஆகவே அதெல்லாம் நான்தான்.

81 நான் இதை ஒருபோதும் மறக்கக்கூடாது. நான் ஒரு உண்மையான அமெரிக்க குடிமகனாக இருக்க வேண்டுமென்றால் என் தேசம் எதுவோ அது தான் நான் என்று நினைவில் கொள்ளவேண்டும். ஏனெனில் நான் என் தேசத்துடனே அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன். தேசத்தை மறக்க இல்லை—இல்லை… தேசத்திற்காக சண்டையிடவோ, அல்லது தேசத்திற்காக மரிக்கவோ அல்லது அது நிற்கிற எல்லாவற்றிற்காகவும், நான் அதற்காக நிற்கவேண்டும். என் தேசம் என்னவோ அது நான் தான். அது

எதற்காக நின்கின்றதோ. அதற்கு நான் நிற்பேன். ஒரு உண்மையான அமெரிக்கனாக இருக்கவேண்டுமென்றால் அதற்காக மரிக்க, அதற்காக சண்டையிட, அதற்காக நிற்க, அதற்காக எதையும் செய்ய நான் தயாராக இருப்பேன். நான் அதின் பாகமாக உள்ளேன். என்னைத் தொடாமல் அதை நீ தொட முடியாது. அதற்கெதிராக எதையாகிலும் நீ கூறினால், நீ எனக்கெதிராகத்தான் கூறுகிறாய். ஏனெனில் நான் ஒரு அமெரிக்கன். ஒரு அமெரிக்கன் என்கிற முறையில் உனக்கெதிராக ஒன்றைக் கூறுவது, அவர்கள் இந்த தேசத்திற்கு எதிராக என்னக் கூறினாலும், அது அவர்கள் உங்களுக்கு எதிராக கூறுவதாகும். ஏனென்றால் நீ அதன் பாகமாயிருக்கிறாய். இதை நீ எப்பொழுதும் மறக்காதே. நீ அப்படிச் செய்யும்போது, அப்பொழுது உனக்கு நினைவிழப்பு வந்துள்ளது. நிச்சயமாக.

82 நினைவிருக்கட்டும். நீ அதில் பாகங்கொள்ளவில்லை என்றால் நீ ஒருபோதும் அமெரிக்க குடிமகனாக இருக்க முடியாது. நீ பாகமாக இருக்கத் தான் வேண்டும். அமெரிக்கா என்னவோ அதுவாகத்தான் நீ இருக்க வேண்டும். நான் அதனுடைய பாகமாயிருக்க வேண்டும். இது என்னுடைய தேசமாதலால் அதின் காரியங்களில் நான் பங்கேற்க வேண்டும். அது என்னவோ அது நான். பாருங்கள். அவள் என்னவாய் இருந்தாளோ அதுவே நான், அவள் என்னவாய் இருந்தாலும் பரவாயில்லை. நான் இன்னுமாய் அவள்தான்.

83 ஒரு அமெரிக்கனாய் இருக்கும் பட்சத்தில், நான் பிளைமௌத் பாறையில் (Plymouth Rock) அவளுடனும், முற்பிதாக்களுடனும் நான் இறங்கினேன். நான் அப்படி செய்ய வேண்டும்; நான் அவளின் ஒரு பாகம், அவளுக்கு வரும் ஆபத்துக்களிலிருந்து எச்சரிக்க நான் பால் ரெவருடன் (Paul Revere) சவாரி செய்தேன். நான் ஒரு உண்மையான அமெரிக்க குடிமகனானால் நான் பிளைமொத் பாறையில் இறங்கினேன். அவளுக்கு வரும் ஆபத்திற்காக எச்சரிக்க நான் பால் ரெவருடன் சென்றேன். நான் என்ன பொருட்படுத்தி கூறிக்கொண்டிருக்கிறேன் என்பது இப்பொழுது புரிகின்றதா?

84 பனியால் நிறைந்த டெலிவாரேவை ஜார்ஜ் வாஷிங்டனுடனும், வெறுங்காலுடனிருந்த அவருடைய போர் வீரர்களுடன் நான் கடந்து சென்றேன். நான் அங்கிருந்தேன். ஏனென்றால் நான் இத்தேசத்துடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன். அவர் அங்கு என்ன செய்தாரோ அதில் என் பாகம் உண்டு; நான் இப்பொழுது செய்து கொண்டிருப்பது அவருடைய பாகமே. டெலிவாரேவில் வாஷிங்டனுடன் நான் அடையாளங்கொள்ளப்படுகிறேன்.

85 ஸ்டோன்வால் ஜாக்ஸானுக்கு (Stonewall Jackson) காரியங்கள் மிகவும் எதிராக இருந்த நேரத்தில் நான் அவருடன் நின்றேன். “காரியங்கள் இப்படி உனக்கெதிராக இருக்கையில் நீ எப்படி கற்சுவர்போல் நிற்கின்றாய்?” என்று அவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு நீல நிறக்கண்களை உடைய அந்த துடிப்பான மனிதன் தன் காலணியினால் மண்ணை உதைத்து

“நான் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நன்றி செலுத்தால் தண்ணீர் கூட குடிக்கமாட்டேன்” என்றார். நானும் அவரோடு ஒரு கற்சுவர் போல நிற்க வேண்டும். நான் ஸ்டோன்வால் ஜாக்சனுடன் அங்கு நின்றேன். நான் ஓர் அமெரிக்கனானதால் அவரோடும் அவருடைய தீர்மானத்திலும் அடையாளங்கண்டு கொள்ளப்படுகிறேன். டெலிவாரேவைக் கடக்கும் போதும்! போரிடும் யுத்தங்களில்!

86 குவாமில் (Gaum) அவர்கள் கொடியை ஏற்றினபோது நான் அவர்களோடிருந்து நானும் கொடியை ஏற்றினேன். ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்த பிறகு, அந்த சிறிய குழுவானது அங்கு ஓடிச் சென்று, கொடியை மேலே ஏற்றினபோது அக்கொடியேற்றத்தில் நானும், நாமெல்லாரும் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறோம். குவாமில் தொங்கி கொண்டிருக்கும் அந்தக் கொடியில் எல்லா அமெரிக்கர்களும் அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றனர். அவர்கள் அங்கு கொடியேற்றியதை நான் கேள்விபட்டபோது கண்ணீர் என் கன்னங்களில் வழிந்தோடியது. அது நான்தான். அது நீங்கள் தான். நாம் அதனுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படும் போது அது நாம் எல்லோரும் தான்.

87 அவளுடைய எல்லாமே நான்தான். அவளுடைய எல்லா மகிமையும் என்னுடைய மகிமையாயுள்ளது. அவளுடைய எல்லா அவமானமும் என்னுடைய அவமானமாயுள்ளது. அவள் இழிவான காரியங்களைச் செய்வாளானால், நான் அவளை உற்றுப்பார்த்து… அவளைக் கடிந்து கொள்ள வேண்டும். அவள் மகிமையை பெற்றுக் கொள்வாளானால் நானும் அவளுடன் மகிமையைப் பெற்றுக்கொள்வேன். ஏனெனில் நான் அவளுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன். இப்பொழுது ஒரு அமெரிக்கனாக அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டுமென்றால் அவளுடைய அவமானத்திற்காகவும், அவளுடைய எல்லா மகிமைக்காகவும், எப்படிப்பட்ட நிலையாய் இருந்தாலும், நீ அதனுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றாய்.

88 இப்பொழுது, ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமானால், நீ அதை போன்றே இருத்தல் வேண்டும். அதை நாம் மறக்க வேண்டாம். அவர் எப்படி இருந்தாரோ, நான் அவருடன் அடையாளங்கண்டு கொள்ளப்படுகிறேன். நான் அவரோடு அடையாளங் கண்டு கொள்ளப்படுகிறேன்.

89 கவனியுங்கள், அவர் எனக்குள் இருக்கிறார், நான் அவருக்குள் இருக்கிறேன். கவனியுங்கள். அப்படியானால் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும், அதாவது ஒரு அசலான கிறிஸ்தவன் அவருடன் இருக்கிறான். “உலகமானது அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்னால், அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே.” கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு

முன்னால், நித்திய மண்டலங்களிலே தேவனுடன் நாம் அடியாளங் கண்டுகொள்ளப்படுகிறோம். அங்கு நான் அவருடன் இருந்தேன். எனக்கு நித்திய ஜீவன் இருந்ததினால் நான் அங்கு அவருடன் இருந்தேன். அவருடன் நான் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன், "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி தேவப் புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள்."

90 ஆபிரகாமிற்கு எழுபத்தைந்தும், அவனுடைய மனைவியாகிய சாராளுக்கு அறுபத்தைந்து வயதாயிருக்கும்போது, அவர் அவர்களை அழைத்து, அவர்கள் ஒரு குழந்தையைப் பெறப்போகிறார்கள் என்று கூறினபோது நான் அவருடன் இருந்தேன். "நான் எப்படியும் குழந்தையைப் பெறப்போகிறேன்" என்று அவன் **கர்த்தர்** உரைக்கிறதாவது என்பதன் மேல் நின்றபோது, நான் அவனுடன் இருந்தேன். நானும் அவனோடு நின்றேன். மற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவனோடு நின்றனர். அவனுக்கு சோதனைகள் வந்தபோது அவனுடன் நான் இருந்தேன். அவன் ஈசாக்கை பலி கொடுக்க மலை உச்சிக்கு சென்றபோது நான் அவனோடிருந்தேன். ஆட்டுக்கடா தோன்றின போது நான் அவனுடன் இருந்தேன்.

91 யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்டபோது நான் அவனுடன் இருந்தேன். ஏனென்றால் அவன் ஆவிக்குரியவனாயிருந்தான். மற்றவர்களோ மாம்சத்திற்குரியவர்களாயிருந்தனர். தன் சகோதரர்களால் தனக்கு நேரிடப்போகும் தீங்குகளை அவன் அறிந்தபோது நானும் அவனுடன் இருந்தேன். அவன் என்னவாய் இருந்தானோ, அது நான் தான், நான் என்னவாய் இருக்கிறேனோ, அது அவன் தான். "கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கிறோம்." யோசேப்பு அவனுடைய குகையில், கல்லறையில் இருந்தபோது நான் அவனுடன் இருந்தேன். அவன் பார்வோனுடைய வலதுகரமாக அவன் உயர்ந்தபோது நான் அவனுடன் இருந்தேன். நீயும் அவனுடன் அடையாளங் கண்டு கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது.

92 யாக்கோபு தூதனுடன் அந்த இரவு முழுவதும் போராடினபோது நான் அவனோடிருந்தேன். நானும் போராடினேன். அவன் எதைக் கடந்து சென்றவனாய் இருந்தான் என்பது எனக்குத் தெரியும். ஆகவே யாக்கோபு போராடின அதே நேரத்தில் நான் அவனுடன் சேர்ந்து போராடினேன். ஏனெனில் நான் அவனுடைய சகோதரன்.

93 மோசே எகிப்திற்கு சென்றபோது நானும் அவனுடன் இருந்தேன். எரிகின்ற முட்செடியினிலே அவனோடு நானும் இருந்தேன். நீ ஒரு கிறிஸ்தவனாய் வேதத்தில் உள்ள எல்லா கதாபாத்திரங்களுடனும் நீ அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். அதை மறவாதே! ஜனங்கள் எல்லோரும் மோசேவிற்கு எதிராக திரும்பின போது நான் அவனுடன் இருந்தேன், சிவந்த சமுத்திரத்தை மோசே கடந்தபோது

நானும் அவனோடிருந்தேன். அவன் தன் கரங்களை உயர்த்தி முன்னோக்கி சென்றபோது, சிவந்த சமுத்திரமானது திறந்தது. அந்த நேரத்தில் தான் நான் கிறிஸ்துவுக்குள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன். அந்த மணி நேரத்திலே நான் மோசேயோடு இருந்தேன்.

94 எப்படி ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இருந்தார்களோ, எப்படி விசுவாசிகள் இருந்தார்களோ, இப்பொழுது ஒவ்வொரு விசுவாசியும் அதே நபருடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறான். அது என்னவாய் இருந்தாலும். அதனுடன் நீ அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். அதை மறவாதே. அப்படி மறந்தாயானால் நீ ஆவிக்குரிய நினைவிழப்பை பெற்றுள்ளாய்; நீ யாரென்பதை மறந்து போயிருக்கிறாய்.

95 மோசே சமுத்திரத்தை கடந்தபோது இப்பொழுது அவனுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறோம்.

96 ஆகாபின் நாட்களிலே, தேவனையோ அல்லது, பிலேயாமையோ சேவிக்க வேண்டுமென்று அவர்கள் தெரிந்தெடுக்கவேண்டிய நேரத்தில் தோன்றிய எலியாவுடன் நான் இருந்தேன். அவன் அந்த தெரிந்தெடுத்தலைச் செய்ய கர்மேல் பர்வதத்தின் மேல் இருந்தபோது நாமும் அவனுடன் இருந்தோம், ஏனென்றால் அவன் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட அதே தேவனுடைய சரீரத்தில் நாமும் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றோம். ஆகவே அந்த சரீரத்தில் அடையாளங் கண்டு கொள்ளப்படுவோமானால் அப்பொழுது அங்கே நாமும் அவரோடு இருந்தோம் என்று நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது சரி.

97 தாவீது தன் சொந்த சகோதரரால் புறக்கணிக்கப்பட்டபோது, நான் அவனோடு இருந்தேன். நான் தாவீதுடன் இருந்தேன்; நீயும் ஒரு கிறிஸ்தவனாய் இருந்தால் நீயும் கூட இருந்தாய். அவனுடைய புறக்கணிக்கப்படுதலில் நீயும் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும்.

98 எரிகிற அக்கிச் சூளையில் இருந்த எபிரெய பிள்ளைகளுடன் நானும் இருந்தேன். அங்கு நான்காவதாக ஒரு மனிதன் இருந்தபடியால் அந்த அக்கினியானது அவர்களை எரிக்க முடியவில்லை.

99 சிங்க கெபியில் நான் தானியேலுடன் இருந்தேன். கர்த்தருடைய தூதன் அவனை அங்கே அடையாளங் கண்டபோது நானும் அங்கே அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன்.

100 நான் அதிநிச்சயமாக அவருடன் கல்வாரியிலே இருந்தேன். கல்வாரியில் அவருடன் நான் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். கல்வாரியிலே அவருடனே நான் அடையாளம் கண்டு கொள்ளப்பட மாத்திரம் அல்லாமல் அவருடன் நான்

கல்வாரியிலே மரித்தேன் என்கிற நிலையில் நான் இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவருடன் கல்வாரியில் மரிக்க வேண்டும். அவருடன் கல்வாரியில் நீ மரிக்கவில்லை என்றால், அவருடைய எந்த ஒரு காரியத்திலும் நீ இருக்க முடியாது. அவர் மரித்தபோது நான் அங்கிருந்தேன். நான் அவருடன் மரித்தேன். அவர் மரித்தோரிலிருந்து உயிரடைந்தபோதும் நான் அவருடன் இருந்தேன். ஈஸ்டர் காலையில் உயிர்த்தெழுதலில் நானும் மேலே வந்தேன். அவர் என்னவெல்லாம் செய்தாரோ அங்கே சரியாக நானும் அவருடன் இருந்தேன்; ஒவ்வொரு விசுவாசியும் அதே போன்று தான்.

101 பாதாளத்திலுள்ள எல்லா வல்லமைகளும் அவர் மூலமாய் ஜெயங்கொள்ளப்பட்டது. இப்பொழுது நான் கிறிஸ்து இயேசுவிற்குள் உன்னதங்களில் அவருடன் அமர்ந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் அவ்வாறே அமர்ந்து கொண்டிருக்கிறான். ஏனென்றால் நீ அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும்.

102 இந்தக் கடைசி நாட்களிலே அவருடைய ஊழியத்திலே அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்ற விசுவாசிக்கின்ற கிறிஸ்தவர்கள் மத்தியில் என்னைக் கண்டு கொள்கிறேன். “அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.” அவருடைய ஊழியத்தின் மூலம் இந்நாளில் என்னை அடையாளங் கண்டுகொள்கிறேன். நீங்களும் அதை விசுவாசித்து, அதனுடன் நடக்கையில் அதேபோன்று உங்களை கண்டு கொள்கிறீர்களா? கவனியுங்கள், அவர் செய்த கிரியைகளை, அதே போன்று ஒவ்வொரு விசுவாசியும் செய்வான் என்று அவர் கூறியுள்ளார். “நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்”. அப்படியானால் நீங்கள் அவரோடு அடையாளம் கண்டு கொள்ளப்பட முடியுமல்லவா? பிறகு வார்த்தையினிமித்தம் நிந்தை வரும்போது, பாருங்கள், அவர் நிந்தையை சகித்து நின்றதுபோல நீங்களும் நின்று அவரால் அடையாளங் கண்டுகொள்ள முடியுமா? நான் அவருடன் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன்.

103 பெந்தேகோஸ்தே நாளிலே அவருடன் நான் இருந்தேன். அங்கிருந்த சீஷர்களுடன் நான் இருந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் அவர்களுடன் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன்.

104 பரிசுத்த ஆவி என ஒன்று உண்டு என்று விசுவாசிக்காத அளவிற்கு சில சபைகள் இப்பொழுது மிகவுமாக நினைவிழப்பு வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ளதைக் கண்டு நான் ஆச்சரியமுறுகிறேன். சபையானது எங்கு சென்றுள்ளதென்று பார்த்தீர்களா? நினைவிழப்பு வியாதியினால் பீடிக்கபட்டுள்ள ஒரு மோசமான நிலைமையாயுள்ளதே! பாருங்கள், இயேசு கிறிஸ்து மறுபடியுமாக அங்கு வந்துள்ளார் என்பதை அவர்கள்

மறந்து போயிருக்கின்றனர். இயேசுகிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பதையும் அவர்கள் மறந்து போயிருக்கின்றனர். அவர்கள் மறந்துள்ளனர். அவர் ஒரு பிரமாணத்தை அளிப்பவர். அல்லது ஒரு தீர்க்கதரிசி, அல்லது ஒரு —ஒரு நல்ல மனிதரென்று அவரை நினைத்தனர். அவர் தேவன் என்பதை அவர்கள் மறந்துபோய் உள்ளனர். அவர் நேற்றும் இன்றும் மாறாதவர் என்பதை அவர்கள் மறந்துவிட்டிருந்தனர். ஆகவே சபையானது ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியின் மோசமான நிலையை அடைந்துள்ளது. இவை எல்லாவற்றையும் அவர்கள் மறந்துள்ளனர். அதை அவர்களால் இன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை.

105 நாம் பெந்தேகொஸ்தே நாளிலே சீஷர்களோடு இருந்து அவர்களுடன் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திலுள்ள பேதுருவின் பிரசங்கத்தில் நான் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டேன். அவன் என்ன கூறினான் என்பதை நான் கேட்டேன். அவன் என்ன கூறினான் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவன் என்ன கூறினானோ அதற்கு நான் கீழ்படிந்தேன். இப்பொழுது அதே காரியத்துடன் நான் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன்.

106 ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை நீங்கள் பெற்றுக் கொள்ளாதீர்கள். ஏனெனில் அது உன்னை வேறொரு காரியத்துடன் அடையாளம் காண்பித்துவிடும். வார்த்தையுடன் சரியாக தரித்து நில்!

107 அப்போஸ்தலர் 16-ம் அதிகாரத்தில் சபையானது இயேசு கிறிஸ்துவில் “நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்” என்ற கட்டளையைப் பெற்றபோது நாம் சபையுடன் இருந்தோம். நான் அங்கே அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். “உலகமெங்கும் சர்வ சிருஷ்டிக்கும்.” “விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின் தொடரும்,” என்பதில் நான் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

108 பாருங்கள், இப்பொழுது நீ அதனுடன் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறாயா அல்லது உனக்கு ஏதோ ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதிப்பட்டு, அதனால் விசுவாசிகளை பின் தொடரும் அடையாளங்களை உன்னால் விசுவாசிக்கமுடியாமல் போகிறதா? பாருங்கள், நீ அதை விசுவாசிக்கவில்லையென்றால், அப்பொழுது நீ ஆவிக்குரிய நினைவிழப்பை உடையவனாயிருக்கிறாய், பாருங்கள், தேவன் அதை வாக்குப்பண்ணினார் என்பதை நீ மறந்துவிட்டிருக்கிறாய். “விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும்” என்றும் அவர் கூறினார். நீ அதை மறக்காதே. நீ அதை மறந்து ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. நீ அதனுடன் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

109 பரிசுத்த யோவான் 14-வது அதிகாரம் 12-ம் வசனத்துடன் நீ அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். “என்னை

விசுவாசிக்கிறவன் நான் செய்த கிரியைகளை தானும் செய்வான்" அதை நீ மறக்காதே. நீ அதை மறந்தாயானால், உனக்கு ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதி வந்துள்ளது. நீ யாரென்பதை மறந்து போய் இருக்கிறாய். உன்னுடைய சாட்சியின் பொருள் என்ன என்பதை நீ மறந்து விட்டாய்.

110 "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்" என்று அவர் கூறியுள்ளதைப் பற்றி என்ன? அதுவே சத்தியம் என்று விசுவாசிக்கும்படி அங்கு நீ அடையாளங் கண்டுகொள்ளப்பட்டிருக்கிறாயா? மாற்கு 11-ல் "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்" என்று அவர் கூறியுள்ளார். அது உண்மை என்று நீ விசுவாசிக்க அங்கு நீ அடையாளம் கண்டு கொள்ளப்பட முடியுமா? அப்படி இல்லையென்றால் நீ ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை பெற்றுக் கொண்டிருக்கிறாய்.

111 நீ மறந்து, உன்னுடைய கிறிஸ்தவ சமநிலையை இழக்கிறாய். நீ எங்கு சார்ந்தவன் என்று உன்னால் கூற முடியவில்லை. நீயோ "நான் மெதோடிஸ்ட், நான் பாப்டிஸ்ட், அதைக் குறித்துதான் நான் அறிவேன். நான் பெந்தேகொஸ்தே. நான் *இது, அது* அல்லது *வேறொன்று*" என்று கூறுகின்றாய். கவனி! அப்படியென்றால் அது உன்மேல் உள்ளது என்பதை காண்பிக்கிற அந்த வியாதியின் அறிகுறியாகும், அதாவது நீ ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை கொண்டிருக்கிறாய்.

112 நீ, "பாருங்கள், சகோதரன் பிரான்ஹாமே, நான்—நான் இதை விசுவாசிக்கிறவன். ஆதலால் நான்—நான் சிறிதளவும்..." என்று கூறலாம். இப்பொழுது ஒரு நிமிடம் பொறு. தேவன் இந்த காரியங்களை செய்வதாக வாக்களித்திருந்தால், அவைகள் கடைசி நாட்களில் இருக்கும் என்று கூறியிருந்தால், உன்னுடைய கோட்பாடு உன்னை அதிலிருந்து விலக்கி வைத்திருக்குமானால், உன் மேல் அந்த வியாதியின் அடையாளம் இருக்கிறதை என்பதை என்னால் காண முடிகின்றது என்பதற்கு அது ஒரு நல்ல அடையாளமாகும். அது ஆவிக்குரிய நினைவிழப்பாயுள்ளது. வார்த்தையுடன் உன்னை அடையாளம் கண்டு கொள்ள நீ மறந்து விட்டிருக்கிறாய்.

113 நீங்களோ, "வியாதியஸ்தர் சுகமாக்கப்படுகிறார்கள் என்று நான் விசுவாசிப்பதில்லை" என்று கூறலாம். நீ ஆவிக்குரிய நினைவிழப்பைப் பெற்றுள்ளாய்.

114 நீங்கள், "பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நான் விசுவாசிப்பதில்லை" என்று கூறலாம். ஆவிக்குரிய நினைவிழப்பு!

115 நீ, "கடைசி நாட்களில் தேவன் இந்த காரியங்களை செய்வதாக வாக்களித்துள்ளார் என்று நான்—நான் விசுவாசிப்பதில்லை" என்று கூறலாம். அப்படியானால் வேதத்திற்கு பதிலாக ஒரு கோட்பாட்டிற்கோ அல்லது ஒரு பிரமாணத்திற்கோ நீ செவிகொடுத்திருக்கிறாய். உனக்கு ஆவிக்குரிய நினைவிழப்பு உள்ளது. எனவே நீ எங்கு சார்ந்திருக்கிறாய் என்று உனக்கு தெரியவில்லை. நீ "ஒரு கிறிஸ்தவன்" என்று அறிக்கை செய்து கொண்டு வார்த்தையை நிராகரிக்கின்றாய். அது சரியாக உன்னை ஆவிக்குரிய நினைவிழப்பிற்கு திரும்பவும் கொண்டு வரும், பாருங்கள், நீ எங்கே நிற்கிறாய் என்பதை அறியாமலிருக்கிறாய். நீ ஆவிக்குரிய நினைவிழப்பை பெற்றுள்ளாய். நீ உன்னை வேதவாக்கியங்களுடன் அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

116 நீ சீஷர்களுடன் இருக்கத்தான் வேண்டும். எல்லா வேதவாக்கியங்களுடனும், கட்டளை பெற்றபொழுது இருந்த சபையுடனும் நீ நிற்கத்தான் வேண்டும். "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்; விசுவாசிக்கிறவர்களை இவ்வடையாளங்கள் பின்தொடரும்." அதுவே அவருடைய கட்டளையாயிருந்தது. இப்பொழுது அவர்கள்…அதுதான் கட்டளையாயிருந்தது.

117 ஆனால் ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதியின் மோசமான நிலையை அவர்கள் அடைந்துள்ளனர், ஒரு நாள் தோட்டத்தில் ஏவாள் அடைந்தது போலவே, இப்பொழுது அவன் இஸ்ரவேலைப் போல இதே வியாதியினால் அவதியுறுகிறாள், வேதாகம கருத்தரங்கு ஆகாரத்தால் ஒவ்வாமை ஏற்பட்டு உனக்கு ஆவிக்குரிய நினைவிழப்பினை அளித்து விடும். வேதாகமக் கருத்தரங்கு ஆகாரத்தை நீ உண்டால் உனக்கு ஒவ்வாமை ஏற்பட்டு, முதலாவது காரியம் உனக்குத் தெரியுமா? நினைவிழப்பின் வியாதியை உண்மையாகவே பெற்று மோசமான நிலைமைக்குள்ளாவாய். வேதாகமம் கூறும் எதையும் நீ விசுவாசிக்கமாட்டாய்.

118 இன்றைக்கு சபையோடுள்ள காரியம் அதுவேயாகும். நாம் ஒரு எழுப்புதலை அடையாமல் இருப்பதற்கு இதுதான் காரணம். மக்கள் இப்படி இருப்பதற்கு இது தான் காரணம். எது சரி; எது தவறு என்று அறிய முடியாத அளவிற்கு ஒவ்வொரு போதகமும் மக்களை போதையுறச் செய்கிறது. சரியாக. அவளால் தன்னுடைய கர்த்தரை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. அவளால் அவருடைய வார்த்தையை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. அவளால் வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை.

119 இயேசு காட்சியில் தோன்றினபோது இஸ்ரவேலும் இப்படித்தான் இருந்தது. "ஒரு கன்னிகை கர்ப்பவதியாவாள்" என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை எழுப்புவார்

என்று மோசே கூறினதையும் அவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர்கள் ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை கொண்டிருந்தனர்.

120 அதே காரியத்தைத்தான் இன்று சபையும் கொண்டுள்ளது. "கடைசி நாட்களில் இவை நடக்கும்" என்று அவர் கூறியிருக்க, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க, அதை நாம் காண்கையில் சபையானது மரித்ததாய் இருந்து கொண்டிருக்கிறது. அது என்ன? ஆவிக்குரிய நினைவிழப்பு. நாம் நம்மை பெந்தேகோஸ்தே என அழைத்துக்கொண்டு வார்த்தையானது உயிர்த்தெழுந்த கிறிஸ்தவ வல்லமையினால் பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அதனுடன் நம்மை அடையாளம் கண்டுகொள்ள முடியாதவர்களாய் இருக்கிறோம். அவர் இங்கு நம்மத்தியிலிருந்து நான் செய்வேன் என்று கூறின அதேக் காரியத்தை சரியாக நடப்பித்துக் கொண்டு வருகிறார். ஆகையால் கவனியுங்கள், நம்முடைய ஸ்தாபன அமைப்புகளோ ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை அடைந்திருக்கின்றன. நாம் அவதியுற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் எதைச் சார்ந்தவர்கள் என நமக்குத் தெரியவில்லை. ஒருவன் தன்னுடைய சபை சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு *இந்த* சபையிலிருந்து *மற்ற* சபைக்கு, *இந்த* சபைக்கு என்றும், *இந்த* கொள்கை, *அந்த* கொள்கை என்றும் போகிறான். பாருங்கள்?

121 மறுபடியுமாக நமக்குரிய தேவை என்னவெனில், மற்றுமொரு ஆமோஸ் கர்த்தர் உரைக்கிறதாவது என்பதுடன் காட்சியில் வரவேண்டியதுதான். நாம் அவனை வரவேற்போமா? அவர்கள் செய்ததுபோல. அவர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவேயில்லை. அவர்கள் இன்றைக்கும் அவனை வரவேற்கமாட்டார்கள். பிரசங்கம் செய்ய அவன் தலையை நுழைக்கக் கூட அவனுக்கு இடம் கிடைக்காது. இப்பொழுது அது முற்றிலும் சரியானதுதான். ஏனெனில் சபையானது இந்த ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியினால் அவதியுற்றுக்கொண்டிருக்கிறது.

122 இப்பொழுது, ஏன்? லூக்கா 17-ம் அதிகாரத்தின்படி, "மனுஷகுமாரன் வெளிப்படும்போது, சோதோமின் நாட்களில் அடையாளகள் நடந்ததுபோல மறுபடியும் நடக்கும்" என்று தேவன் இந்த கடைசி நாட்களில் வாக்குரைத்திருக்கிறார். அது நடைபெறுவதை ஜனங்கள் காண்கிறார்கள், சிலர் அதை விசுவாசிப்பதும் கூட இல்லை. அது மனோதத்துவம் என்று அவர்கள் கருதுகின்றனர். அது ஒரு பிசாசின் ஆவி என்று அவர்கள் நினைக்கின்றனர். அது என்ன? அவர்கள் ஆவிக்குரிய நினைவிழப்பினால் அவதியுற்றுக் கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் உண்மை, அவர்களால் கர்த்தரை புரிந்துகொள்ளமுடியவில்லை. "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." அப்போது

அவர் என்னவாயிருந்தாரோ. இப்பொழுதும் அவர் அப்படியே இருக்கிறார்.

123 ஆனால் என்ன நேர்ந்தது? இன்னுமாய் நம்மை நாமே வார்த்தையில் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஏன்? சபையானது, அவள் ஒரு விடுதியா அல்லது அவள் ஒரு சபையா என்று அவளுக்குத் தெரியவில்லை. ஒரு விடுதி என்று அழைக்கப்பட அவள் விரும்பவில்லை. அவள் ஒரு சபையென்றும் அழைக்கப்படமுடியாது; ஏனென்றால் சபையென்று அழைக்கப்பட வேண்டுமானால், அவள் கிறிஸ்துடன் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். அது அவளுக்கு ஆவிக்குரிய நினைவிழப்பை அளிக்கிறது. அவள் ஒரு விடுதி என்று அழைக்கப்பட விரும்பவில்லை. ஆகவே அது பெந்தேகொஸ்தே சபை, மெதோடிஸ்ட் சபை, பாப்டிஸ்டு சபை அல்லவே அல்ல; அது பெந்தேகொஸ்தே விடுதி. மெத்தோடிஸ்ட் விடுதி, பாப்டிஸ்ட் விடுதி ஆகும், ஏனெனில் அவள் வார்த்தையுடன் அடையாளம் கண்டு கொள்ளப்பட முடியவில்லை. வார்த்தையானது வெளிப்படுத்தப்படும்போதும் அதை அவர்கள் விசுவாசிப்பதில்லை. அது ஒரு வியாதி, ஆவிக்குரிய நினைவிழப்பு. தங்களை தாங்களே அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை; அவர்கள் எதைச் சார்ந்தவர்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அது உண்மை.

124 அது சரியாக ஏதோ ஒரு காரியத்தை கலப்பினமாக்குவதுபோல் உள்ளது. “நான் பார்த்ததிலேயே மிகவும் ஊமையான ஒரு மிருகம் கோவேறு கழுதையாகும் என்று நான் எப்பொழுதும் நினைப்பதுண்டு” என்று நான் அடிக்கடி கூறுவது போல. பாருங்கள் அது ஒரு கலப்பின மிருகமாகும். பாருங்கள், அதனுடைய தாய் ஒரு குதிரை, தந்தையோ ஒரு கழுதையாகும். ஆகவே அது எதைச் சார்ந்தது என்று கூட அதற்குத் தெரியாது. நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய முதல் காரியம், நீங்கள், நீங்கள்—நீங்கள் இவைகளை சேர்த்து, ஒரு கழுதையைப் பெறலாம். பிறகு… அல்லது ஒரு கோவேறு கழுதையைப் பெறலாம். ஆனால் கோவேறு கழுதையினால் திரும்பவுமாக இனப்பெருக்கம் செய்ய இயலாது. பாருங்கள். அதனால் முடியாது. அதற்கு நீங்கள் ஒன்றுமே கற்றுக் கொடுக்க முடியாது. அது எளிதில் புரிந்து கொள்ள இயலாத ஒன்று. அதனிடம் நீங்கள் ஒன்றும் கூறமுடியாது…அது பெரிய நீண்ட காதுகளை வைத்துக்கொண்டு ஒன்றுமே கேட்காமல், அது தன்னுடைய வாழ்நாளிலே சாகும் முன்னால் கூட உன்னை உதைக்காமல் விடாது. அவ்வளவுதான். அது முடியுமானால், உங்கள் மேல் பாயத்தக்கதாக எப்பொழுதும் காத்துக் கொண்டே இருக்கும்.

125 இந்த காரியம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிற நிறைய கலப்பின கிறிஸ்தவர்களைத் தான் என் நினைவில் கொண்டு வருகிறது. ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை அவர்கள்

அடையும் வரை சபையை கலப்பினம் செய்கிறவர்கள். அவர்களால் மறுபடியும் மற்றெந்த காரியத்தையுமே பிறப்பிக்க முடியாது.

126 கலப்பின சோளப்பயிரை பற்றி அவர்கள் பேசுகிறார்கள். கலப்பின சோளப்பயிர் ஒன்றுமல்ல. அது உங்கள் வாயில் போடக் கூடிய எல்லாவற்றையும் காட்டிலும் மிகவும் மோசமான ஒன்றாகும். எந்த கலப்பினமுமே. அந்த காரணத்தால் தான், நீங்கள் இச்சிறிய செடிகள் விரைவாக வளர்ச்சியுறும்படி மக்கிப் புளித்த எருப்படுகையால் வெதுவெதுப்பாக்கப்பட்டுக் கண்ணாடியில் மூடப்பட்ட பாத்தி செடிகளையும் கலப்பின பொருட்களையும் எடுத்து, அதன் மேல் தெளித்து, அதை பக்குவப்படுத்தி வளர்க்கிறீர்கள். ஏன்? ஏனென்றால் பூச்சிகள் தங்களை அண்டவிடாமல் அவைகளாலே காத்துக்கொள்ள முடியாது.

127 ஆனால் ஒரு உண்மையான, தூய இன மரபைச் சேர்ந்த ஒன்றிற்கு தடுப்பு மருந்தை நீங்கள் போடத் தேவை இல்லை. பூச்சிகள் தங்களை அண்டாதவண்ணம் தடுக்கும் வல்லமை அதற்குள்ளேயே இருக்கிறது. ஆகவே அது ஒரு உண்மையான அசலான பரிசுத்த ஆவியைப் பெற்ற மனிதனை அவிசுவாச பூச்சிகள் தொடாதபடிக்குச் செய்கிறது.

128 ஒரு வயதான கோவேறு கழுதையிடம் நீங்கள் சென்று, “பையா, நீ *இதை, அதை* செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்” என்று கூறுங்கள்.

129 அது படுத்துக்கொண்டு, “ஹா! ஹா! ஹா!” என்று கத்தும். அதன் காதுகள் மேலும் கீழும் ஆடும். இதைப் போன்று கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் அநேகர் செய்வதை நான் கண்டிருக்கிறேன்.

130 “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின் தொடரும்” என்று நீங்கள் கூறினால்.

131 “ஊ? அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன என்று நான் விசுவாசிக்கிறேன். ஊ? ஊ? ஊ?” பாருங்கள், அவன் என்ன விசுவாசிக்கிறான் என்பதே அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு எதுவும் தெரியாது. அவன் எங்கிருந்து வந்தவன் என்றும், எங்கே போகிறான் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு குதிரையின் நினைவிழப்பு உள்ளது. அவனுக்கு எங்கிருந்து வந்தோம் என்பதே தெரிவதில்லை. ஆதலால் அவனால் மேற்கொண்டு செல்ல முடியாது.

132 ஆனால் தூய இன மரபைச் சார்ந்த ஒன்று தான் எனக்கு பிடிக்கும். ஓ, அவன் மிருதுவானவன். அவனிடம் நீ பேச முடியும். தன்னுடைய தந்தை, தாய், தாத்தா, பாட்டி, யாரென்றும் அவனுக்குத் தெரியும். தான் எங்கிருந்து வருபவன் என்பதைக் காண்பிக்க அவனிடம் மரபு கால வழி அட்டவணை சான்றுகள் உள்ளன.

133 தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலுமாக திருப்பி, பெந்தேகொஸ்தே நாளிலே அவர்களை அடையாளப்படுத்த பரிசுத்த ஆவியின் வல்லமை மேலே இறங்கிய பரிசுத்தவானைப் போன்ற ஒரு நல்ல வம்சாவளிக் கிறிஸ்தவனை எனக்கு பிடிக்கும். அதுவே ஒரு நல்ல வம்சாவளிக் கிறிஸ்தவன். அவன் எங்கிருந்து வருபவன் என்பதை அவன் அறிவான். அவன் மெத்தோடிஸ்ட், பாப்டிஸ்ட், அல்லது வேறெதுவுடனும் அடையாளம் கண்டுகொள்ளப்படமாட்டான். அவன் தேவனுடைய வார்த்தையில் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறான். அவன் சரியாக எங்கு நின்றுகொண்டிருக்கிறான் என்பதை அவன் அறிவான். தன்னுடைய பிதாவினுடைய; இயேசுகிறிஸ்துவினுடைய ராஜரீக ரத்தமானது அவனுக்குள் பாய்கிறது. அது என்ன செய்கிறதென்பது அவனுக்குத் தெரியுமே! அவன் ஒவ்வொரு வார்த்தையும் விசுவாசிக்கிறான். தேவன் அவனுக்குள்ளே கிரியை செய்து, பின்தொடரும்படி அவர் வாக்குரைத்ததை அடையாளங்கள் மூலம் அதை உறுதிப்படுத்துகிறார். ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதி அவனுக்கு கிடையாது. அவன் ஒரு அசலான கலப்பின இனமரபைச் சேர்ந்தவன். எனக்கு அது பிடிக்கும்.

134 ஆனால் சபை இன்று ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதியின் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. அது எதைச் சார்ந்தது என்பது அதற்குத் தெரியாது. அதைக் குறித்த எல்லாவற்றையும் அது மறந்துவிட்டது, ஒரு சபையை உருவாக்குகிற, இந்த எல்லாக் காரியங்களையும் அது மறந்துபோய் உள்ளது.

135 நம்மை மிகவும் ஐஸ்வரியமுள்ளவர்களாய், நாம் இப்பொழுது உள்ளதுபோல ஆக்கியிருப்பது எது? இஸ்ரவேல் ஐசுவரியம் பொருந்திய ஸ்தாபனத்தில் எப்படி இருந்ததோ, அதுபோன்று அந்த ஸ்தானத்திற்கு லவோதிக்கேயா திருப்பிச் சென்றுள்ளது. அது ஏழ்மையாய் இருந்தபோது அது செய்யக்கூடிய எல்லாவற்றிற்கும், அது பெற்ற எல்லாவற்றிற்கும் அது தேவனை நம்ப வேண்டியதாயிருந்தது; ஆகவே தேவன் அதனோடிருந்தார்; அது ஆவிக்குரியதாய் இருந்தது. முன்னேறியது. ஆனால் அது ஐசுவரியத்தை அடைந்தபோதோ, இக்காரியங்கள் நடைபெற்றது; அவர்களுடைய பட்டினங்கள் கட்டப்பட்டு எழும்பிற்று. அவர்களுடைய ஸ்திரீகள் சீர்கெட்டுப் போனார்கள். அவர்களுடைய ஆண்கள் அதை அனுமதித்தார்கள். அவர்களுடைய பிரசங்கிகள் அவர்களை கீழ்தரத்தில் விட்டு விட்டு தீர்க்கதரிசிகளை வெளிப்படையாக கண்டனம் செய்தனர். பிறகு அந்நிலைமை போன்ற ஒன்றினுள் அவர்கள் உள்சென்றனர். எது அதைப் பிறப்பித்ததென்றால், அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வந்தன என்பதை மறந்துகொண்டிருந்ததே அதைப் பிறப்பித்தது.

136 மெத்தோடிஸ்டுகளாகிய நீங்கள், பாப்டிஸ்டுகளாகிய நீங்கள், பிரஸ்பிடேரியன்களாகிய நீங்கள், மெத்தோடிஸ்டுகளாகிய நீங்கள்

ஜான் வெஸ்லியை நினைவு கூறலாம். பாப்டிஸ்டுகளாகிய நீங்கள்! ஜான் ஸ்மித் ஜனங்களின் நிலைமையை நினைத்து அழுது ஜெபித்தார். அவருடைய மனைவி அவரை மேஜைக்கு அழைத்து செல்லும் அளவிற்கு அவர் இரவெல்லாம் அழுது ஜெபித்ததால் அவருடைய கண்கள் வீங்கி மூடிக் கொண்டன. காரணம் என்ன?

137 ஜான் வெஸ்லி கூறின மகத்தான காரியங்களில் ஒன்று… முந்தைய மெத்தோடிஸ்டு பிதாக்களில் ஒருவர், "மெத்தோடிஸ்டு சபையின் குமாரத்திகளின் அவமானம் என்னவென்றால், அவர்கள் மிகவும் உலகப்பிரகாரமாக ஆனதால், அவர்கள் தங்கள் விரல்களில் மோதிரங்களை அணிந்துள்ளனர்" என்று கூறினார் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது உள்ள குட்டைக்கால் சட்டைகளை கண்டால் அவர் என்ன கூறுவார்?

138 என்ன நடந்தது? ஆவிக்குரிய நினைவிழப்பு. சரியாக அதுதான், நீ எங்கிருந்து வந்துள்ளாய் என்பதை மறந்து விட்டாய், உனக்கு இந்த எல்லாக் காரியங்களும் உள்ளன, ஏனென்றால் தேவனுடைய இரக்கம், நற்குணம் இதை உனக்கு செய்தது.

139 இது வினோதமாய் உள்ளதே என்று நீ எண்ணுகிறாயா? இது இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியிலும், தீர்க்கதரிசனத்திலும் சரியாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 3-ஆம் அதிகாரத்தில் "நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் நான் ஐசுவரியவானென்றும் செல்லுகிறபடியால்" என்று கூறப்பட்டுள்ளது. பாருங்கள், நீ அதை அறியாமலிருக்கிறாய். அது என்ன? ஆவிக்குரிய நினைவிழப்பு. அதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்.

140 சபைகள் இன்று பணத்தை பெற்றுள்ளன. தேசத்திலே ஒரு ஸ்தாபன சபையும் கூட லட்சக்கணக்கான, லட்சக்கணக்கான டாலர்கள் மதிப்பு மிக்கதாய் இல்லாமல் இல்லை. லட்சக்கணக்கான, லட்சக்கணக்கான டாலர் செலவில் கட்டிடங்களையும் மற்ற காரியங்களையும் கட்டி, கர்த்தருடைய வருகை சமீபமாய் இருக்கிறது என்று சபைகள் பிரசங்கிக்கின்றன. "ஐசுவரியவானென்றும், 'எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்' சொல்லுகிறப்படியால்" அவர்கள் கொண்டிருப்பதைக் காட்டிலும் சிறந்த கல்வியையுடைய பிரசங்கிகளையும், அவர்கள் அறிந்திருப்பதைக் காட்டிலும் அதிக வேத கல்வி அறிவை உடையவர்களையும் பட்டிணத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இடங்களில் பெரிய கட்டிடங்களை உடையவர்களாயும் இருக்கின்றனர். அவர்கள் விரும்பும் எந்த காரியத்தையும் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. ஆகவே அவர்கள் என்ன செய்தனர்? ஆவிக்குரிய நினைவிழப்பைப் பெற்று, இஸ்ரவேலைப் போல, தேவன் தான் அவர்களுக்கு இவைகளைச் செய்தார் என்பதை மறந்து போனார்கள்.

141 இயேசு கிறிஸ்து தம்முடைய தூதனை யோவானிடத்திற்கு அனுப்பி இந்த கடைசி கால சபை இந்த ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியை பெற்றிருக்கும் என்று கூறினார். வேதாகமும் இவைகளை தீர்க்கதரிசனமாக உரைத்தது. அவர்கள் “நிர்பாக்கியமுள்ளவர்கள்” என்பதை நினைவில் கொள்ளுங்கள். தாங்கள் பெரியவர்கள் என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் எதையோ பெற்றுள்ளனர் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அவரோ அவர்கள் “நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் இருக்கிறார்கள்” என்று கூறியுள்ளார். அவர்களுடைய நிலைமையை அவர்களிடம் எடுத்துச் சொல்ல ஒரு வழியும் இல்லை.

142 இப்பொழுது, வெட்கக்கேடான நிலையில் உள்ள ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ தெருக்களில் நிர்வாணமாகவும் குருடாகவும் இருந்தால், அது காண்பதற்கு ஒரு பரிதாபமான நிலையாய் இருக்கும். ஆனால் அவர்கள் சரியான மனநிலைமையை உடையவர்களாய் இருந்து, தாங்கள் யார் என்றும், தாங்கள் மனிதர்கள், தாங்கள் ஆடைகளை அணிய வேண்டுமென்றும் அறிந்து, மனித இனத்துடன் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டுமென்று இருக்கும்போது, நீ அங்கு சென்று, “நீ நிர்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறாய்” என்று கூறுகிறாய் என வைத்துக்கொள்வோம். நீங்கள் அவனிடம் சென்று, “சகோதரனே நீ நிர்வாணியாயிருக்கிறாய்” என்று கூறுவாயானால்…

143 “இப்பொழுது பார்! நான் டாக்டர் *இன்னார்—இன்னார்!* நீ போய் உன் வேலையைப் பார், நான் *இதை—இதைச்* சேர்ந்தவன்; நான் உனக்குச் சொல்கிறேன்! உனக்கு வேலையே இல்லையா? நீ பரிசுத்த உருளையன், எனக்கு ஒன்றும் கூறத் தேவையில்லை!” [ஒலி நாடாவில் காலி இடம்—ஆசி.]

144 “ஒரு மனிதன் இதைச் செய்வது தவறு; ஜனங்கள் செய்துகொண்டிருக்கிற காரியங்களை செய்வது தவறு” என்று அவர்களிடம் சொல்லுங்கள்.

145 அதற்கு அவர்கள் தங்கள் பிரசங்கி எவ்வளவு பரந்த மனப்பான்மையை உள்ள ஒருவர் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். பாருங்கள்? அது என்ன? அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் கட்டளைகளை மறந்து விட்டார்கள். அவர் வந்து தான் செய்வேன் என்று கூறின அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வாரானால் அதை விசுவாசிக்க அவர்களுக்கு விருப்பமில்லை. அது ஆவிக்குரிய நினைவிழப்பாயுள்ளது. பாருங்கள், அவர்கள் மறந்து விட்டனர். அவர்கள் நிர்வாணியாயிருந்து அதை உணராமல் அறியாமல் உள்ளனர்.

146 அவர்கள் “நான் சபையைச் சேர்ந்தவனாயிருப்பதால் அதெல்லாம் தேவை” என்று நினைக்கின்றனர். ஓ, சகோதரனே, அப்படியென்றால் அது தேவனுடைய பார்வையில் பிறப்புணர்ச்சியுடன் உதவி செய்து கொள்ளும் ஒரு கழுகமாகவும் (mason) ஏதாவதொன்றாகவும் அல்லது ஏதாவது ஒரு விடுதியாகவுமே அன்றி வேறெதுவுமாக காணப்படாது. ஒரு சபையை மாத்திரம் சேர்ந்து கொண்டால், தேவனுக்கு அது ஒன்றுமே இல்லை.

147 நீங்கள் தேவனுக்கு குமாரரும் குமாரத்திகளுமாய் இருக்க வேண்டும். நீ தேவனால் பிறந்தவனாய் இருக்க வேண்டும். வார்த்தை தான் தேவன். என் தந்தையின் ஒரு பாகமாக நான் ஆகும்போது, என் தந்தையின் முழுமையாக நான் ஆகிறேன். நீங்கள் தேவனின் ஒரு பாகமாகும்போது, நீங்கள் தேவனாக முழுமையடைகிறீர்கள். அவருடைய முழு வார்த்தையை, நீங்கள் அதைக் குறித்த எல்லாவற்றையும் விசுவாசிக்கிறீர்கள்.

ஆவிக்குரிய நினைவிழப்பு!

148 உன்னுடைய பெயர் என்னவென்றும் உனக்குத்தெரியாமல் போகும் பட்சத்தில் உனக்கு எப்படி இருக்கும்? நீ ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாய் இருக்கையில், அப்படி இருந்தாய் என்று நான் நம்புகிறேன், நீ அருமையான மக்களை உடைய நல்ல குடும்பத்திலிருந்து வரும்போது, அக்குடும்பத்தின் பெயரை நீ மறந்து, அங்கு வெளியில் சென்று, வெட்கக்கேடானா விதத்தில் வாழ்வது என்னவாயிருக்கிறது? அவர்கள் “உன்னுடைய பெயர் ஜோன்ஸ் அல்லவோ அல்லது வேறெதுவோ” என்று கேட்கும்போது, “பாருங்கள், நான் யார் என்று எனக்கே தெரியவில்லை,” பாருங்கள்? அது சரி. அது இருப்பதிலேயே பயங்கரமானகாரியம், அது பயங்கரமான ஒரு நிலையை அடைவதாகும்.

149 பாருங்கள், இந்நிலைமையைத் தான் சபையானது அடைந்திருக்கிறது. அது இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதித்துவமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது அதை மறந்து போனது, ஏனென்றால் வார்த்தையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக அதினுள் ஸ்தாபனங்களையும் பிரமாணங்களையும் செலுத்திவிட்டார்கள். “அவர்கள் நிர்வாணியும் குருடரும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருந்து அதை அறியாமலிருக்கின்றார்கள்” என்று அவர்களிடம் கூறுவதற்கு வழியே இல்லை.

150 நான் மறுபடியும் பர்மிங்ஹாமில் இருக்கமாட்டேன். ஆகையால் இந்த ஒரு முறைதான் அவர்கள் அதைக் கேட்கப்போகிறார்கள். பாருங்கள்? சரி, நான் ஒரு…விதையை விதைப்பது தவிர வேறு எதற்கும் நான் பொறுப்பாளி அல்ல. அது எந்த நிலத்திற்கு செல்ல வேண்டும் என்பதை தேவன் வழி நடத்துவார்.

151 ஆம், அவர்கள் வார்த்தையின் வாக்குத்தத்தத்தை மறந்து போயினர். அவர்கள் மறந்துவிட்டனர். இயேசு வந்தபோது இஸ்ரவேலானது அத்தகைய குழப்பத்தில் இருந்து அதை மறந்து போனது. ஓ, மேசியா வரப்போகிறார் என்று விசுவாசிப்பதாக கூறி அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் மேசியா வந்து தன்னை வார்த்தையினாலே அடையாளம் காண்பித்தபோது அவர்கள் தேவனுடைய வார்த்தையை அவமாக்கும் அளவிற்கு அவர்களிடம் அநேக பாரம்பரியங்கள் இருந்தன.

152 கடைசி மணி நேரத்திற்கு முன்பு "சோதோமின் நாட்களில் இருந்ததுபோல இருக்கும்" என்று இயேசு வாக்குரைத்திருக்கிறார். அது அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டியதாயிருக்கின்றது. மக்கள் தங்களுடைய பாரம்பரியத்தினாலே தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆவிக்குரிய நினைவிழப்பு! அதுதான் சரியாக ஆவிக்குரிய நினைவிழப்பாய் உள்ளது. பாருங்கள், இக்காரியங்களை அவர்கள் மறந்து விட்டனர்.

153 "ஓ, நான் *இதைச்* சார்ந்தவன். நான்—நான் *இதைச்* செய்தேன். நான் ஆவியில் நடனமாடியிருக்கிறேன். நான் *இதை* செய்தேன்" பாருங்கள், என்னே, என்னே, அதனுடன் செய்வதற்கு ஒன்றுமே இல்லை, ஒன்றுமேக் கிடையாது.

154 நீங்கள் எப்படி ஒரு கிறிஸ்தவனாயிருந்து வார்த்தையை மறுதலிக்க முடியும்? அவ்வாறு நீங்கள் செய்ய முடியாது. தேவன் வார்த்தையாயிருக்கிறார். வார்த்தை உங்களில் இருந்தால் நீங்களும் வார்த்தையும் ஒன்றுதான். எதெல்லாம் வார்த்தையோ அது நீங்கள் தான். ஆமென். நான் இந்த சந்ததியில் ஜீவிப்பேனானால். இந்த சந்ததிக்கு இந்த வார்த்தையின் பாகம் என்ன வாக்குரைத்திருக்கின்றதோ, நான் அதுவாகத்தான் இருத்தல் வேண்டும். நான் ஒரு கிறிஸ்தவனாயிருப்பேனானால் வேதம் எதையெல்லாம் போதித்து, எதற்காக நிற்கின்றதோ அவை எல்லாவற்றிலும் நான் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

155 அல்லேலூயா! என்னை ஒரு பரிசுத்த உருளை என்று கூறப்போகின்றீர்கள். எப்படியாயினும், சரியாக இப்பொழுது நான் பக்திபரவசமடைகிறேன். ஆம் ஐயா.

156 வேதம் உரிமை கோருகிற ஒவ்வொரு காரியத்தோடும் நான் அடையாளம் கண்டு கொள்ளப்பட வேண்டும். அது அதை உரிமை கோருகிறது. ஆகையால், நான் இந்த நவீன நாட்களில் ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதியினால் பீடிக்கப்படாமலிருந்தால், நான் வார்த்தையுடன் அடையாளங் கொள்வேன், அடையாளங் கண்டு கொள்ளப்பட முடியும். நான் அதை மறுதலித்தால், அப்பொழுது எனக்கு ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதி உள்ளது. ஏதோ ஒன்று நடந்துள்ளது; நான் ஒரு பிரமாணத்தையோ அல்லது ஒரு

போதகத்தையோ, அல்லது சில சபையையோ அல்லது ஒரு கூட்ட மனிதரையோ நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். வார்த்தை வந்து தன்னை அடையாளம் காண்பித்தாலும் கூட, “என்னால் ஒன்றுமே செய்ய முடியாது.”

157 இதன் காரணமாகத்தான் இயேசு அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை. அவர்கள் தங்கள் ஆசாரியரைக் குறித்து, “ஓ, நல்லது இந்த மனிதன் பரிசுத்தமுள்ளவர். நம்முடைய பரிசுத்த ஆசாரியன், நம்முடைய பரிசுத்த இவர்” என்றனர்.

158 ஆகவே, “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள், அவனுடைய கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்” என்று இயேசு கூறினார்.

159 காயீன் ஒரு நல்ல பலியை படைத்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவன் உத்தமமாய் இருந்தவன். ஒரு பலிபீடத்தை கட்டி, முழங்காற்படியிட்டு, தொழுது, பலியை படைத்து, தேவனிடம் ஜெபம் செய்தான். அப்படியானால், நீ ஒரு சபையை சேர்ந்து, ஒரு பீடத்தை வைத்து, உன்னுடைய தசமபாகத்தை செலுத்தி, சபைக்குச் சென்று, ஒரு நல்ல ஜீவியம் செய்வது மாத்திரமே தேவனுக்கு தேவை என்றால், அவர் காயீனை கடிந்து கொண்டது அநீநியாக இருக்குமே, ஏனெனில் அவன் அதே காரியத்தை தானே செய்தான், ஆம் ஐயா, அதைத்தான் சரியாக செய்தான்.

160 ஆனால் *மதம்* என்பது “ஒரு போர்வை” என்று பொருள்படுகிறது. ஆகவே உன்னுடைய சொந்த நல்ல கிரியைகளினாலே நீ மூடப்படமுடியாது. ஒரே ஒரு காரியத்தைத் தான் தேவன் ஏற்றுக்கொள்வார், அது தான் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தமாகும், அதுதான் உண்மையான போர்வையாகும், அதற்கு வெளியில், “பிரமாணத்தை வைத்திரு” என்று கூறுவாயானால், ஆவிக்குரிய நினைவிழப்பு! அதுதான் சம்பவித்தது.

161 இப்பொழுது, கவனியுங்கள், அவர்களுடைய வார்த்தையை அவர்கள் மறந்துவிட்டனர். அவர்கள் வேதத்தை மறந்து விட்டனர். அவர்கள் வாக்குத்தத்தத்தை மறந்து விட்டனர். மெத்தோடிஸ்ட் எப்படியிருந்தனரோ, பாப்டிஸ்டு எப்படியாயிருந்தனரோ, அல்லது வேறொருவர் எப்படியிருந்தனரோ, அந்த பளபளப்பில் அவர்கள் வாழ முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த நாளின் வாக்குத்தத்தம் இங்கே உள்ளது. தேவன் அதை தம் வார்த்தையின் மூலம் பேசி, மறுபடியுமாக உறுதிப்படுத்தி அது அப்படித்தான் என்பதை நிரூபிக்கிறார். ஆனாலும் இன்னுமாய் அதை அவர்கள் விசுவாசிப்பதில்லை. ஆவிக்குரிய நினைவிழப்பு! சரியாக அதேதான். அது முற்றிலும் சரி. முற்றிலும் நினைவிழப்பு வியாதியஸ்தர்கள் முற்றிலுமாக அதை விசுவாசிப்பதில்லை.

162 ஒரு பிரெஞ்ச் (french) போர் வீரன். எனக்கு ஒரு சிறுகதை கூறப்பட்டது. நாம் முடிப்பதற்கு முன்பாக பார்ப்போம். இவ்வளவு

நேரமாகும் என்பது எனக்கு தெரியாது. இன்னும் கிட்டத்தட்ட பத்துப் பக்க குறிப்புகள் என்னிடம் மீதம் உள்ளது. மற்றொரு சமயம் நாம் அதை பார்ப்போம். கவனியுங்கள். ஒரு பிரெஞ்ச் போர்வீரன். இந்த நினைவிழப்பு வியாதியை கொண்ட போர்வீரர் குழுவை சேனையிலிருந்து பிரித்தனர். அந்த நினைவிழப்பு போரின்போது ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக இருந்தது. ஆகையால் அவர்கள் ஒரு திட்டத்தை வைத்திருந்தனர். அவர்கள் குடும்பத்தினரை வரவழைத்து இவர்களால் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடிகின்றதா என்று பார்ப்பார்கள். ஒருகால் ஒன்று அல்லது இரண்டு பேர் அடையாளம் கண்டு கொள்வார்கள். மற்றவர்களுக்கோ நம்பிக்கை கிடையாது. ஆகவே பிறகு மற்ற எல்லோரையும் நல்வாழ்விடத்தில் அழைத்து செல்வார்கள். அவர்கள் வாழ்நாள் முழுவதையும் அங்குதான் தங்களுடைய ஜீவியத்தைக் கழிக்க வேண்டும்.

163 இரயில் வண்டியில் அவர்கள் மலையின் மேல் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்கள் ஒரு இரயில் நிலையத்தில் நின்று, இப்பையன்களை தங்கள் கால்களை தளரவிடுவதற்காக அவர்களை வெளியே விட்டனர். காவளாளிகள் அந்த மலையின் மேல் இறங்கி அவர்களை கவனித்தனர். அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் நினைவிழப்பின் வியாதியைக் கொண்டவர்களாவர்.

164 எனவே அங்கிருந்த ஒரு வாலிபனை அவர்கள் கவனித்தனர். அவன் வெளியே வந்து அந்த தண்ணீர் தொட்டியை சுற்றிப்பார்க்க ஆரம்பித்தான். மலைமுழுவதும் அவன் சுற்றி நோக்கினான். அவன் தன் முகத்தை தேய்த்துக்கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்தான். அவன் மறுபடியும் அந்த தண்ணீர் தொட்டியைப் பார்த்தான். இரயில் நிலையத்தை முழுவதும் சுற்றி நோக்கி, நடக்க ஆரம்பித்தான். காவலாளி அவனைத் தடுப்பதற்கு பதிலாக அவனைப் பின் தொடர்ந்தான்.

165 அவன் மலையின் மேல் ஏறி, ஒரு சிறிய பாதையின் வழியாகச் சென்று, வலதுபுறமாக திரும்பி, வேறொரு மலையின்மேல் ஏறி, ஒரு சிறிய மரத்தாலான அறையண்டை வந்தான். அவன் பார்த்தான். அந்த நுழைவாயிலிருந்து கையில் ஒரு கம்பை வைத்திருந்த ஒரு வயதான மனிதன் வந்து, அவனைக் கட்டிப்பிடித்து “என் மகனே, நீ திரும்ப வருவாய் என்பது எனக்குத் தெரியும், நீ இறந்துபோனாய் என்று அவர்கள் கூறினர். ஆனால் நீ திரும்ப வருவாய் என்று எனக்குத் தெரியும்” என்றார். அந்தப் பையன் சுயநினைவை அடைந்தான். அவனுடைய நினைவிழப்பு வியாதி அவனை விட்டு அகன்றது. அவன் யாராயிருந்தான் என்பதை அவனால் அடையாளங் கண்டுகொள்ள முடிந்தது. அது அவனுடைய தந்தை என்பதை அவன் அறிந்துகொண்டான்.

166 கடின பயிற்சியின் மூலம், ஸ்தாபனங்களாலும், பிரமாணங்களாலும், உலகக் காரியங்களாலும் மிகவும் அதிர்வுக்குள்ளான ஓ, சிலுவையின் போர்வீரனே, நீ சில நிமிடங்கள் வெளியே வந்து, ஏன் நீ வேதத்தைச் சுற்றிப் பார்க்கக் கூடாது? நீ அங்குமிங்கும் சுற்ற நேரிடலாம். இந்நாட்கள் ஒன்றில் நீ ஒரு விசுவாசியாக இங்கே வார்த்தையில் உன்னையே நீயே அடையாளம் கண்டு கொள்ளலாம். நீ அவரை அறிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். நீ சுயநினைவை அடைந்து, கெட்டகுமாரன் செய்தது போல, உன்னைத் தானே கண்டு கொள்ளக் கூடும். தேவனுடைய வார்த்தைகளினாலே நீ உன் அடையாளத் தன்மைகளை கண்டு கொள்ளக் கூடும்.

167 சில காலத்திற்கு முன்பு, மற்றொரு நாளிலே, யாரோ ஒருவர், “ஆனால் சகோதரன் பிரான்ஹாமே, பெந்தேகொஸ்தே மக்களாகிய எங்களைப் பாருங்கள், என்ன அருமையான சபைகளை நாங்கள் கொண்டுள்ளோம். ஏன், பயிற்சி பெற்ற ஊழியக்காரர்களை நாங்கள் வைத்திருக்கிறோமே” என்று கூறினார்.

168 கவனியுங்கள், மனிதன் ஒரு மனைவியை மணம் செய்யும் போது, அவளுடைய அழகை அவன் நம்புவதில்லை. இல்லை, அவன் அவளுடைய விசுவாசத்தின் ஆணையுறுதியை, அவளுடைய வார்த்தையை நம்புகிறான். அவளுடைய அழகை அவன் நம்புவதில்லை. அவன் அவளுடைய உண்மைத்துவத்தை நம்புகிறான்.

169 அதே போன்று தான் நீ தேவனை மணக்கும்போதும், நீ கட்டக் கூடிய அழகான பெரிய சபையிலே நீ நம்பிக்கை வைப்பதில்லை. ஆனால் “நான்தான் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்” என்று இயேசு கிறிஸ்து உரைத்த வாக்குத்தத்தத்தில் தான் உன் நம்பிக்கையை வைக்கின்றாய், நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.]

நாம் நம்முடைய தலைகளை சற்று நேரம் தாழ்த்துவோமாக.

170 இன்றிரவு, இக்கட்டிடத்தில் அமர்ந்திருக்கும் மக்கள், ஆண்களும், பெண்களுமாக, நித்தியத்தை சேர்ந்திருக்கும், நித்தியத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் மக்கள், ஒரு நாளிலே அல்லது வேறொரு நாளிலே நீங்கள் தேவனை சந்திக்கப் போகிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா என்று நான் யோசிக்கிறேன். நினைவிழப்பு வியாதியின் ஒரு துளி உங்களுக்கு இருந்தால் கூட நீங்கள்…நீங்கள் தவறான காரியத்தில் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, நீங்கள் அலைந்து திரிந்து, இன்றிரவு, நீங்கள் இயேசு கிறிஸ்துவில் அடையாளம் கண்டு கொள்ள முடியாமற் போய்விடுவீர்களோ என்று நான் நினைக்கிறேன். அப்படியானால் நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்தி, “சகோதரன் பிரான்ஹாமே, எனக்காக ஜெபியுங்கள், நான்—நான் ஒரு உண்மையான கிறிஸ்தவனாகவும், உண்மையான விசுவாசியாகவும்

அடையாளம் கண்டு கொள்ளப்பட விரும்புகிறேன்” என்று கூறுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உன்னை ஆசீர்வதிப்பாராக! ஓ, ஆமாம், சுற்றிலும் எங்கும். தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

171 மாடி முகப்பில் உள்ள யாரோ ஒருவர், நீங்கள், “சகோதரனே, அது சத்தியம் என்று நான் உண்மையாக விசுவாசிக்கிறேன். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் அநேக வருடங்களுக்கு முன்பாக இருந்த கிறிஸ்தவர்களைப் போல நாம் இல்லை. நான் விசுவாசிக்கிறேன்” என்று கூறலாம்.

172 பெந்தேகொஸ்தே மக்களே, உங்கள் தாய் தந்தையர்கள் அங்கே வெளியில் தெருக்களில் நின்று, பழைய தம்புருவை அடித்துக் கொண்டிருந்தனர். உங்களைக் குறித்து என்ன? உங்கள் தாய்,சிறிய குழந்தைகளாகிய உங்களிடம் அயாராது பாடுபட்டு, களைத்துப் போயிருப்பார்கள். உங்களுக்கு சில சமயங்களில் துணிகளோ, மற்ற எல்லாக் காரியங்களோ இல்லாமற்போயிருக்கும். ஆனால் உங்கள் தாயும் தந்தையும் கிறிஸ்துவை உயர்த்திப் பிடிக்க குறிக்கோளிற்கு உண்மையாய் இருந்தார்கள்.

173 பெந்தேகொஸ்தே மக்களாகிய நீங்கள் என்ன செய்தீர்கள் என்று பாருங்கள். ஐம்பது வருடங்களுக்கு முன், நீங்கள் ஸ்தாபனத்தை விட்டு வெளியே வந்தீர்கள். அவிசுவாசிகளிடமிருந்து உங்களை வேறுபிரித்துக் கொண்டீர்கள். அதுதான் உங்களை பெந்தேகொஸ்தேயினராக ஆக்கினது. ஆனால் “பன்றிசேற்றிலே புரள திரும்பினது போன்றும், நாய் தான் கக்கினதைத் தின்ன சென்றது போலவும்” நீங்கள் எந்த குழப்பத்திலிருந்து வெளியே வந்தீர்களோ சரியாக அதற்குள்ளே திரும்பிச் சென்று அதே காரியத்தை செய்தீர்கள். காரியம் என்ன? ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதி ஜனங்கள் மத்தியில் பரவிவிட்டது. நீங்கள் உங்களுடைய பிரமாணங்களையும், உங்கள் ஸ்தாபனச் சான்றிதழ்களையும் இப்பொழுது கொண்டுள்ளீர்கள். இப்பொழது சரியாக மற்றவர்களுடன் சேர்ந்துள்ளீர்கள், மற்றவர்களுடன் இருக்க விரும்புகிறீர்கள். உங்கள் ஸ்திரீகள் தங்கள் முடிகளை வெட்டிக் கொள்ளவும், வர்ணம் பூசிக்கொள்ளவும், மற்றக் காரியங்களை செய்யவும் நீங்கள் அனுமதித்து விட்டீர்கள். சபைகளில் இந்த எல்லாக் காரியங்கள் செய்யும்படி அனுமதித்து விட்டீர்கள். அது என்ன? ஆவிக்குரிய நினைவிழப்பு.

174 பிறகு, முதலாவது நீங்கள் இதை அறிய வேண்டும், தேவன் மக்களிடையே வர ஆரம்பிக்கையில், அதன்பின் என்ன நேரிடுகிறது? உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாருங்கள், நீங்கள் அந்த நினைவிழப்பு வியாதியினால் மிகவும் சுகவீனமடைந்துள்ளீர்கள். பாருங்கள், நீங்கள் அந்த ஒரு காரியத்தை எப்போதும் கேட்டிருந்தீர்கள். நீங்கள் சில நிமிடங்களில் அந்த பிரமாணங்களிலிருந்து விலகி, வேதத்தை எடுத்து, ஒரு கிறிஸ்தவன்

எப்படி அடையாளங் கண்டு கொள்ளப்பட வேண்டும் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறதில்லையா? “விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும்!”

175 அப்போஸ்தலரில் பேதுரு “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள், வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாகிறது” என்று கூறினான். அது அப்படியல்ல என்று அவர்கள் உன்னிடம் கூறுவார்களானால், அப்படியென்றால், உன்னுடைய போதகருக்கு, ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதி மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. அவர் தன்னைத்தானே அந்த சபையுடன் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஸ்தாபனம் அல்ல; ஒரு சபை, கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரம்.

176 இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் இங்கிருக்கிறார். அவர் என்ன செய்வேன் என்று வாக்குரைத்தாரோ சரியாக அதைச் செய்ய இங்குள்ளார். இப்பொழுது சிறிது நேரம் நீங்கள் உங்களுடைய தலைகளை வணங்கி ஜெபித்துக் கொண்டிருங்கள். பரிசுத்த ஆவியானவர் தாமே பேச அனுமதியுங்கள். இதைப்பாருங்கள்... இந்த நாளுக்கான வாக்குத்தத்தம் என்னவென்பதை எவருமே அறிவர். இப்பொழுது தேவைகள் உள்ள உங்களுக்கு இன்றிரவு... உங்களில் அநேகர் கரங்களை உயர்த்தியிருக்கிறீர்கள். நீங்கள் அதை செய்வதற்கு முன்னால்...

177 நாம் இங்கே இருந்து வியாதியஸ்தருக்காக உண்மையாக ஜெபிக்கையில், நீங்கள் இக்காரியங்களெல்லாம் அப்படி அல்ல என்று கூறும் அந்த அவிசுவாசத்தினின்றும், அந்த ஸ்தாபனம், அந்த பிரமாணங்களிலிருந்தும், இது பிசாசினால் உண்டானது என்றும் கூறுகின்றதிலிருந்தும் உங்களால் வெளிவரமுடியுமா என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர்கள் அப்படிச் சொல்வார்களானால், “இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது”. இது தான் உண்மையென்றால் இது என்னவாயிருக்கும்? சற்று சிந்தியுங்கள், அது அப்படியென்றால் இப்பொழுது நீ எங்கிருக்கிறாய்? பாருங்கள், நீ அதை வெளியே பேச வேண்டியதில்லை. உன் இருதயத்தில் மாத்திரம் விசுவாசி. இங்கே அதை விசுவாசிக்கிற ஜனங்கள் உள்ளனர். நான் இங்கே கடந்த இரண்டு இரவுகளாக உட்கார்ந்து ஏதோ ஒன்றுக்காக நான் பாடுபட்டு, அதை வெளியே அழைப்பதற்காக, என் நாவை அடக்கிக் கொண்டிருக்கிறேன்.

178 நண்பனே, இதை நினைவில் கொள். அது தேவனுக்கும் உனக்கும் உள்ள ஒன்று. அது தவறாக உள்ளது என்று நீ அதை நினைத்துக் கொண்டிருந்தால் என்னவாகும்? என்ன நடக்கும் என்று உனக்குத்

தெரியுமா? நீ அதற்காக மன்னிக்கப்படமாட்டாய், ஆவிக்குரிய நினைவிழப்பு, நீ சரியாக உன்னுடைய நித்திய மரணத்திற்கு, அவிவிசுவாசத்திற்கு சென்று விடுவாய், “விசுவாசியாதவனோ ஏற்கனவே ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாயிற்று!”

179 இப்பொழுது உன்னுடைய வியாதிக்காக ஜெபித்து, “கர்த்தராகிய இயேசுவே, நீர் வாக்குரைத்தீர். நான்...” என்று கூறு.

இதற்கு முன்பு எப்போதும் வந்திராத சில அந்நியர்கள் இங்கிருக்கலாம்.

180 இயேசு, “லோத்தின் நாட்களில் நடந்ததுபோல” என்று வாக்குரைத்த ஒரு வேத வசனத்தை நான் எடுக்க உள்ளேன். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஜனங்கள், அதற்கு தெரிந்து கொள்ளப்பட்ட குழு, வெளியே அழைக்கப்பட்டதுமான ஆபிரகாமின் குழு இருந்தது. ஆபிராமிலிருந்து ஆபிரகாம் என்று அவன் பெயர் மாற்றப்பட்ட பின்தான் ஆபிரகாம் வார்த்தை மாம்சமானதைக் கண்டான். அது சாராளின் இருதயத்தின் நினைவுகளைப் பகுத்தறிந்தது.

181 ஆபிரகாமின் இராஜரீக வித்து வந்து, அதைச் செய்த போது அவர்கள் அவரை “ஒரு பிசாசு” என்றனர்.

182 அவர் “பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவரும் அதே காரியத்தைத்தான் செய்வார், என்னை அப்படி அழைத்தீர்களானாலும் உங்களுக்கு மன்னிப்பு உண்டு. ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக நீங்கள் பேசுவீர்களேயானால் உங்களுக்கு மன்னிப்பே கிடையாது” என்றார்.

183 இப்போது அவர் தாமே. தம்முடைய வல்லமையால் இந்த மக்கள் கூட்டத்தினுள் வந்து, நீ எங்கே இருந்தாலும், தம்முடைய ஆவிக்குரிய பகுத்தறிதல் மூலம் அவர்தான் வார்த்தை என்பதைக் காண்பிக்கிறார். ஆகவே இங்கு யாராவது ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதியினால் அவதியுற்றால், அவர்களுக்கு...சாக்குபோக்கு இருக்காது என்ற இந்த பீட அழைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக நான் கூறுகிறேன்.

184 தேவனாகிய கர்த்தர் தாமே உதவி செய்வாராக. இப்பொழுது உங்களுடைய தலை வணங்கியிருப்பதோடு, பயபக்தியாய் ஜெபியுங்கள்.

185 பாருங்கள், அங்கு ஒரு ஸ்திரீ எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறாள். அவள் தன் கரங்களை முகத்தில் வைத்துள்ளாள். அவள் முதுகு தண்டு பிரச்சனையினால் அவதியுறுகிறாள். அவளுக்கு நரம்புத் தளர்ச்சியும் கூட உள்ளது. அவளுக்கு வயிற்றுக் கோளாறும் உள்ளது. அவள் இப்பொழுது எனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறாள். அவள் இந்த தேசத்தை சேர்ந்தவள் அல்ல என்று அவளுக்குத் தெரியலாம். அவள் மேகான் (macon) என்று அழைக்கப்படும் பட்டினத்திலிருந்து

வருகிறாள். ஆம், நீர் யார் என்பதை தேவனால் எனக்கு கூற முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீர் திருமதி அயர்ஸ். அது சரியென்றால் உன் கரத்தை உயர்த்து. நான் உனக்கு ஒரு அந்நியனாயிருக்கிறேன். அது உண்மை, இல்லையா? இப்பொழுது உன்னுடைய பிரச்சனை முடிவுற்றுவிட்டது. நீ இயேசுகிறிஸ்துவினுடைய வஸ்திரத்தை தொட்டுவிட்டாய். அவர் உன்னை முழுமையாக சொஸ்தமாக்கிவிட்டார். இப்பொழுது நீ அதை விசுவாசி.

186 கட்டிடத்தின் பின்னே ஒரு மனிதன் அமர்ந்திருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார். அவருக்கு ஆவியின் அபிஷேகம் தேவைப்படுகிறது. அவர் இங்க எனக்கு முன்பாக நிற்கிறார். அவர் இங்கிருப்பவர் அல்ல. அவர் கரோலினா சார்லேட்டை சேர்ந்தவர். அவருடைய பெயர் லீபோ. உன்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசி. என்—என் சகோதரனே, நீ விசுவாசிப்பாயானால், தேவன் பரிசுத்த ஆவியினால் உன்னை நிரப்புவார்.

187 இங்கே எனக்கு நேராக, வலது புறத்தில் எனக்கு முன்பாக ஒரு மனிதனும் அவருடைய மனைவியும் உட்கார்ந்துள்ளனர். என் வலப்பக்கத்தில் உட்கார்ந்துள்ள வயதான தம்பிகள். அந்த ஸ்திரீ பெருங்குடல் பிரச்சனையால் அவதியுற்றுக்கொண்டிருக்கிறாள். அவளுடைய கணவனுக்கு இருதய கோளாறு உள்ளது. அவர்கள் இந்த இடத்தைச்சார்ந்தவர்கள் அல்ல. அவர்கள் டென்னசியிலிருந்து வருகின்றனர். திரு. மற்றும் திருமதி.தாமஸ் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிப்பீர்களானால், உங்கள் கைகளை மேலே உயர்த்தி உங்கள் சுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்குகிறார். அவர் சரியாக அதைத்தான் செய்வதாக வாக்குரைத்திருக்கிறார். ஆனால் இம்மக்களை என் வாழ்க்கையில் நான் கண்டதேயில்லை.

ஆவிக்குரிய நினைவிழப்பு!

188 இயேசு “நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள். ஏனென்றால் நான்” தனிப்பட்ட பிரதிபெயர், “உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்றார். “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்”.

189 இப்பொழுது, இங்கிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு, நீங்கள் காணக்கூடாத ஏதோ ஒரு தவறு உங்களிடம் இருக்கலாம்… நீங்கள், நீங்கள் விசுவாசிக்க விரும்புகிறீர்கள், ஆனால் உங்களால் அதற்குள் செல்லமுடியவில்லை. ஆதலால் நீங்கள் ஜெபிக்கப்படவும் அவருடைய பிரசன்னத்தில் நீங்கள் இருக்கையில் அவரை ஏற்றுக் கொள்ளவும் விரும்புவீர்களானால் நீங்கள்

வந்து இங்கே வலது புறத்தில் என் பக்கத்தில் நில்லுங்கள். நான் உங்கள் மேல் கைகளை வைத்து ஜெபிக்கட்டும். நீங்கள் ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதியினால் அவதியுறுகையில், ஜெபிக்கப்பட இப்பொழுது நேராக இங்கு வருவீர்களானால், அதிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள். நீங்கள் ஒரு—ஒரு விசுவாசியாயில்லாமலிருந்து, ஜெபிக்கப்பட வேண்டுமென்று விரும்பினால், இங்கு வந்து நில்லுங்கள். வாலிபனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, வேறு யாராவது வருகிறார்களா? பெண்மணியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, வாருங்கள். வாலிப பெண்மணியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது? வாருங்கள், இங்கே இப்பொழுது நில்லுங்கள்.

190 ஆவிக்குரிய நினைவிழப்பு, அதனால் நான் பாதிக்கப்பட விரும்பவில்லை. அவ்வாறு இல்லை. ஏதாவது ஒரு மரணத்தை நான்—நான் அடையட்டும். ஆனால் ஒரு அவிவிசுவாசியாக மரிக்கின்ற அந்த மரணம் நான் ஒருபோதும் அடையாமல் இருப்பேனாக.

191 வா, அவரை இப்பொழுது ஏற்றுக்கொள். நீ அதைச் செய்யமாட்டாயா? மாடி முகப்பிலிருந்து இங்கே கீழே இறங்கி வாருங்கள், நண்பர்களே. இங்கே, கீழே சில படிகள் தான் உள்ளன. அது உங்களுக்கு மரணத்திற்கு, ஜீவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை பொருட்படுத்தலாம்.

192 கவனியுங்கள். கிறிஸ்துவானவரை எதுவும் செய்யாமல் இருக்க வைக்க என்னால் முடியாது. கிறிஸ்துவானவர் ஒரு காரியத்தை தவிர வேறு எதுவும் செய்யத் தேவையில்லை. அவர் தமது வார்த்தையைத்தான் காத்துக் கொள்ள வேண்டியவராயிருக்கிறார். அவர் கிறிஸ்துவாய், தேவனாய் இருக்க வேண்டுமென்றால், அதை அவர் செய்துதான் ஆகவேண்டும். அவர் தமது வார்த்தையை காத்துக் கொள்ளவேண்டும்.

193 இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்தைக் குறித்து நீங்கள் நிச்சயமில்லாமல் இருப்பீர்களானால், ஏன் நீங்கள் இப்பொழுதே வரக்கூடாது. நீ ஒரு ஸ்தாபனத்தை சார்ந்திருந்தால், நீங்கள் ஒரு பெந்தேகொஸ்தே பேரப்பிள்ளையாக இருந்தால், தேவனுக்கு எந்த பேரப்பிள்ளைகளுமே கிடையாது. அவருக்கு குமாரரும், குமாரத்திகளும்தான் உண்டு, ஆனால் பேரப்பிள்ளைகள் கிடையாது. புரிகிறதா? தேவன் அதை கொண்டிருப்பதில்லை. அவருக்கு குமாரரும் குமாரத்திகளும்தான் உண்டு. நீ அப்படியில்லையென்று உனக்குத் தெரியும்.

194 ஒரு வேளை நீ அந்நிய பாஷைகளில் பேசியிருக்கலாம். நீ நடனமாடி இருக்கலாம். *இந்த* எல்லாவற்றையும் நீ செய்திருக்கலாம். அதெல்லாம் சரிதான். அதற்கெதிராக என்னிடம் ஒன்றும் கிடையாது. ஆனால் இன்னுமாய் உனக்கு ஆவிக்குரிய நினைவிழப்பு

வியாதி இருக்குமானால், இங்கே வா, வந்து இங்கே நில்லு. அதைக்குறித்து நாம் ஜெபிப்போமாக. நீ என்ன சொல்லுகிறாய்? சபை அங்கத்தினனே, ஒரு—ஒரு சாதாரண சபை உறுப்பினரே, நீ ஏன் இங்கே வரக்கூடாது? நாம் அதை இப்பொழுதே விரட்டியடிப்போமாக.

195 நியாயத்தீர்ப்பு நாள் வரும்போது நான் உங்களுக்கு முன்பாக நிற்க வேண்டும் என்பதை அறிந்திருப்பதால், நான் இங்கே பர்மிங்ஹாமை இந்த நிலையில் விட்டுச் செல்ல விரும்பவில்லை…ஞாபகங்கொள்ளுங்கள், நான் உங்களை மறுபடியும் சந்திக்கப்போகிறேன். நான் உங்களை இங்கே நியாயத்தீர்ப்பில் சந்தித்து இன்றிரவு நான் கூறினதற்கு நான் பதில் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன்.

196 இப்பொழுது கேளுங்கள். மனந்திரும்புங்கள், நண்பர்களே! அதிலிருந்து வெளியே வாருங்கள். இப்பொழுதே வாருங்கள்.

197 இந்த தேசத்தில் அல்லது இந்த இடத்தில் உள்ள குட்டையாக முடி கத்திரிக்கப்பட்ட எல்லா பெண்களையும் அது இப்பொழுது இங்கே வரச் செய்ய வேண்டும், அது முற்றிலும் சரி, அதாவது, “என் முடி நீளமாக வளரச் செய்ய நான்—நான்—நான்—நான் விரும்புகிறேன் சகோதரன் பிரான்ஹாமே” என்று உண்மையாகவே கூற நீ போதிய கிருபையை பெற்றிருக்கவில்லை. அது செய்ய… “நான் செய்ய…பாருங்கள். அவ்வாறே செய்ய நான் கிருபையை பெற்றிருக்கவில்லை”

நீங்கள், “அதனுடன் செய்ய ஏதாவது இருக்கிறதா?” என்று கேட்கலாம்.

198 இங்கே சில காலத்திற்கு முன்னால், ஒரு உண்மையான மகத்தான ஊழியக்காரர் என்னிடம் வந்து “சகோதரன்.பிரான்ஹாம் நான் உம்மீது கைகளை வைக்க விரும்புகிறேன். எல்லோரும் உம்மை ஒரு தீர்க்கதரிசியாக கருதுகிறார்கள்” என்று கூறினார்.

அதற்கு நான் “நான் ஒரு தீர்க்கதரிசி என்று ஒருபோதும் கூறினதில்லை” என்று கூறினேன்.

199 அப்பொழுது அவர், “ஆனால் மக்கள் உம்மை அவ்வாறு கருதுகின்றனர். நீரோ எப்பொழுதும் ஸ்திரீகளை, அவர்களுடைய குட்டைக்கால் சட்டைகளையும், கத்தரிக்கப்பட்ட குட்டை முடியையும், இன்னும் மற்றதையும் இழிவுபடுத்திக் கூறிக் கொண்டிருக்கிறீர்கள்,” என்றார். ஓ, ஒரு பெந்தேகோஸ்தே மனிதன், மேலும் அவர், “குட்டை கால் சட்டைகளையும், குட்டைத் தலைமுடிகளையும் மற்றுமுள்ள காரியங்களையும் இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள்” என்று கூறி, “அது உம்முடைய வேலை அல்ல” என்றார்.

அதற்கு நான், “அப்படியெனில் அது யாருடைய வேலை?” என்று கேட்டேன்.

200 அவர் “நீர் ஏன் அம்மக்களுக்கு, பெண்களுக்கு இதைக் கூற முயற்சித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும்...மகத்தான ஆவிக்குரிய வரங்களைப் பெறுவது எப்படி என்று போதித்து அவர்களுக்கு உதவக்கூடாது” என்று கூறி, தொடர்ந்து அவர், “உம்மை அவர்கள் மதிக்கிறார்கள். அவர்களுக்கு நீர் என்ன கூறினாலும், அவர்கள் உம்மை விசுவாசிப்பார்கள்” என்றார். எனவே, “நீர் ஏன் அவர்களை எப்பொழுதும் கடிந்து கொள்வதற்கு பதிலாக மகத்தான வரங்களைப் பெறுவது எப்படி என்று கூறி அவர்களுக்கு உதவக் கூடாது” என்று கேட்டார்.

201 அதற்கு நான் “அவர்கள் தங்களுடைய மொழியின் முதல் எழுத்துக்களையே கற்றுக் கொள்ள முடியாதிருக்கையில் எப்படி அவர்களுக்கு இயற்கணிதத்தை நான் கற்றுக் கொடுக்க முடியும்?” என்று கேட்டேன். புரிகிறதா? பார்த்தீர்களா?

202 நீங்கள் கீழிருந்து துவங்க வேண்டும், மனந்திரும்பு அல்லது அழிந்து போ! இப்பொழுது நீ உன்னை ஒப்பிட்டுப் பார்க்க முடியுமே, மனந்திரும்பு அல்லது அழிந்து போ! ஒவ்வொரு இரவும் இயேசு கிறிஸ்து தம்மை முழுவதுமாக இங்கு அடையாளம் கண்டு கொள்கிறார். இந்த இரவுதான் இந்த இரட்சிப்புக்காக நாம் காத்துக் கொண்டிருந்தோம். இங்கு மேலே வர சில அடிகள் மாத்திரம் உள்ளன. நான் காத்திருக்க எனக்கு நிறைய நேரம் உள்ளது.

203 பர்மிங்ஹாம், ஞாபகங்கொள், உன் இரத்தம் என் மீது இல்லை. நான் குற்றமற்றவன், நீங்கள் உண்மையாக பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால். இப்பொழுது நீங்கள் வர உங்களுக்கு ஒரு தருணம் கிடைத்திருக்கிறது. ஏதோ ஒரு விதமான ஒரு சபை—கொள்கையால் நீங்கள் அவதியுற்று, அதன் காரணமாக உங்களுக்கு ஆவிக்குரிய நினைவிழப்பின் வியாதி வந்திருந்தால், நீங்கள் ஏன் வரக்கூடாது? இயேசுவே அந்த சுகமாயிருக்கிறார். நீங்கள் வரமாட்டீர்களா?

204 இப்பொழுது சில ஜனங்கள் மாடி முகப்பை விட்டு வந்துள்ளனர். அவர்கள் வெளியே செல்லுகிறார்களா அல்லது பீடத்திற்கு வருகிறார்களா என்று பார்க்க நான் காத்துக் கொண்டிருந்தேன். இங்கே வந்துள்ளவர்களே, இதைச் சுற்றி வாருங்கள், அது சரி. இங்கு வந்து பீடத்தை சுற்றி “இதனுடன் நான் முடிவு பெற்றுவிட்டேன்” என்று கூறுங்கள். ஆம், இரண்டு ஸ்தீர்கள் இங்கே வந்துகொண்டிருந்தனர். அது அருமையாயுள்ளது.

205 சரியாக இப்பொழுது மேலே வாருங்கள். அதிலிருந்து சில அடிகள் தான். அந்த அடிகள் தான் வித்தியாசத்தைக் குறிக்கலாம்.

206 இப்பொழுது கவனியுங்கள். நான் உங்களிடம் ஒன்றைக் கேட்கப் போகிறேன். அவர் இன்றிரவு வருவாரானால் எப்படி இருக்கும்? “ஓ, அவர் வரவில்லை” என்று கூறுகிறாய். அவர் இன்றிரவு வரப்போகிறாரோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இதுதான் கடைசி அடையாளம். ஞாபகங்கொள். கர்த்தர் உரைக்கிறதாவது!

உண்மையை அல்லாமல் வேறெதாவது நான் கூறினதாக நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் கடைசி அடையாளத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அது வேதப்பூர்வமானது. பெந்தேகோஸ்தே, உன்னுடைய கடைசி அடையாளத்தை நீ காண்கிறாய், எடுக்கப்படுதலுக்கு பிறகு இஸ்ரவேலுக்கு அவர் அளித்த வாக்குத்தத்தத்தோடு உன்னை குழப்பிக் கொள்ளாதே. அது நீயல்ல. அப்பொழுது நீ முடிந்து போயிருப்பாய். புரிகிறதா? இப்பொழுதுதான் உன்னுடைய நாள், உன்னுடைய அடையாளம். இப்பொழுதுதான் உன்னுடைய நேரம், அதைப் புறக்கணிக்காதே. அதைச் செய்யாதே. நீ வந்து விடுவது நல்லது, நீ என்னை தேவனுடைய ஊழியக்காரன் என்று விசுவாசிக்கிறாயா? நினைவிருக்கட்டும்.

207 பர்மிங்ஹாமில் நான் சந்தித்துள்ள அருமையான மக்களைப்போல ஒருபோதும் சந்தித்ததில்லை. என்னுடைய ஜீவியத்திலே நான் சந்திக்க விரும்பும் அருமையான ஜனங்களாய் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு எழுப்புதல் தேவையாயிருக்கிறது. நீங்கள் மரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஆவிக்குரிய நினைவிழப்பு வியாதியை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மரித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதைச் செய்யாதீர்கள். நீங்கள் பெற்றுக் கொண்டதை எழுப்புதல் அடையச் செய்யுங்கள். இயேசு வருவதற்கு முன்னே துரிதமாக அதை மீண்டும் மேலே கொண்டு வாருங்கள்.

208 அது சரி, அவர்கள்…தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் வேளையிலே…கர்த்தர் அழைத்துக் கொண்டிருக்கிற எல்லோரையும் நாம் இங்கே பெற்றுக் கொள்ளும் வரை அவர்களை வரவிடுவோம். இப்பொழுது வாருங்கள்.

209 அந்த நினைவிழப்பு வியாதியை விரட்டுங்கள். அந்த மகத்தான வைத்தியர் அதைச் சுகப்படுத்த, உம்மை விட்டு அதை அப்புறப்படுத்த இப்பொழுது இங்குள்ளார். அவர் இங்கிருக்கிறார் என்பதை அவர் நிரூபித்துள்ளார். எத்தனைப் பேர் உங்கள் கரங்களை உயர்த்துவதன் மூலம் அதை அடையாளம் கண்டு “உண்மையாகவே நான் அதை விசுவாசிக்கிறேன், அவர் இதை செய்வேன் என்று அவரே கூறினார்” என்று கூறுவீர்கள். புரிகிறதா? இப்பொழுது அவர் இங்கிருக்கிறார். பாருங்கள்? பாருங்கள்? நீங்கள் விசுவாசியுங்கள்.

210 நீங்கள் மரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், ஒரு எழுப்புதல் தேவையாயிருக்கிறது என்றும், நான் உங்களுக்கு சத்தியத்தை கூறிக்கொண்டிருக்கிறேன் என்றும் எத்தனைப்பேர் அறிவீர்கள்? [சபையோர் “ஆமென்” என்கின்றனர்.—ஆசி] பாருங்கள்? அது உண்மை.

211 நீங்கள் அருமையான ஜனங்கள். இங்கே உள்ள தெற்கத்தியர்களின் நல்ல இருதயத்தைப் போல வேறு எதுவும்

இல்லை. நீங்கள் அதைவிட மேலானதை கண்டறிய முடியாது. அது சரி. உண்மையான மக்கள்! ஆனால் மக்களே நீங்கள் சீக்கிரமாய் விழித்துக் கொண்டால் நலமாயிருக்குமே! [சகோதரன் பிரான்ஹாம் மூன்று முறை பிரசங்க பீடத்தை அடிக்கிறார்—ஆசி.] நீங்கள் நினையாத நேரத்தில் அது நடக்கலாம். அல்லது நடக்காமல் போகலாம்; எனக்குத் தெரியாது.

212 ஆனால் நீங்கள் உங்களுடைய கடைசி எச்சரிப்பை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பது நினைவிருக்கட்டும். எனவே நீங்கள் தப்பி ஓட நேரம் இருக்கும் பொழுதே, தப்பித்து ஓடி விடுங்கள். இப்பொழுதே வாருங்கள். அவர்கள் வந்து கொண்டிருக்கின்ற வரை நான் காத்துக் கொண்டிருக்கப்போகிறேன், ஏனென்றால் ஒருவேளை…ஒரு ஆத்துமா பத்தாயிரம் உலகங்கள் மதிப்புடையது. மக்கள் உறுதி கொள்கிற வரையில்…

213 நீங்கள் உங்கள் வேறுபாடுகளை உடைத்தெரிந்து, தன்னல குணத்தையெல்லாம் வெளியே எடுத்து, ஆவியைப் பெற்றுக் கொள்வீர்களானால், இந்த காரியம் ஒரு பெரிய எழுப்புதலை அடைந்து, இங்கு சுற்றி இருக்கும் எல்லா சபைகளையும் தொடுவதையே நான் காண விரும்புகிறேன். நீங்கள் அதை விசுவாசிப்பதாக உரிமை கோரினீர்கள். அதை விசுவாசிப்பதாக நீங்கள் உரிமை கோரினீர்கள். அது தன்னை அடையாளம் காண்பிக்க வரும்போது, நீங்கள் ஒருவரையொருவர் வேறு பிரித்து இழுத்துக் கொள்கிறீர்கள். நாம் ஏன் நம்முடைய இருதயங்களை தேவனுடைய வார்த்தையில் இணைத்து சத்தியத்தை விசுவாசிக்கக்கூடாது? அது தான், நீங்கள் மரித்துக் கொண்டே, மரித்துக்கொண்டே, நீங்கள் சரியாக லவோதிக்கேயாவினுள் சென்று கொண்டிருக்கிறீர்கள். அவர் என்ன வாக்குரைத்தாரோ சரியாக அதுதான் அந்த வழியாயிருக்கும். நீங்கள் இப்பொழுது வரமாட்டீர்களா? இப்பொழுதுதான் அந்த நாள். இப்பொழுதே அநுக்கிரக காலமாய் உள்ளது. பரிசுத்த ஆவியானவர் என்ன செய்யப்போகிறார் என்பதை கவனியுங்கள்.

214 இப்பொழுது இங்குள்ள எல்லா ஊழியக்காரர்களும், இம்மக்களுக்காக ஆர்வம் கொண்டுள்ளவர்கள், வந்து என்னுடன் கூட ஜெபிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இம்மக்களுக்காக ஆர்வம் கொண்டுள்ள எல்லா ஊழியக்காரர்களும் இங்கே வாருங்கள். வாருங்கள், சுற்றி வாருங்கள், ஜனங்களுக்கு மத்தியில் வாருங்கள். ஊழியக்காரர் அல்லது ஒரு தனிப்பட்ட ஊழியர், ஒரு நல்ல தனிப்பட்ட ஊழியர். இந்த ஸ்திரீகள் மத்தியில் இப்பொழுது நிற்க விரும்பும் ஒரு பெண்ணும் வரட்டும். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் இந்த இடத்தில் வந்து இம்மக்களின் மத்தியில் தம்மை அடையாளம் கண்டு கொள்ளப்போகிறார் என்று என் முழு இருதயத்துடன் நான் விசுவாசிக்கப் போகிறேன்.

215 முதலாவதாக இப்பொழுது இங்குள்ள இந்த மக்களுக்கு நான் அறிவுறுத்தட்டும். இப்பொழுது, நண்பர்களே, நீங்கள் எதற்காக இங்கிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிவார். நான் அதை உங்களுக்கு நிரூபிக்க முடியும்! நான் இங்கே மேடையின் மேலே ஒவ்வொருவராக நிறுத்தினால் அவர் உங்களுக்கு தெரியப்படுத்தாத காரியம் ஒன்றும் இருக்காது. என் சிறு வயது முதற்கொண்டே அது இருந்து வருகிறது. இந்த வரம் கேள்விக் குறியாயில்லை. ஆனால் கேள்வியானது அதை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியுமா? அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா என்பது தான். இப்பொழுது அவர் இங்கே இருக்கிறார். பாருங்கள், இப்பொழுது அவர் இங்கிருப்பாரானால். அதன்பின் ஒரே ஒரு காரியம் மாத்திரமே உள்ளது, அது அவர் தமது வார்த்தையை காத்துக் கொள்வார் என்பதாகும். நீங்கள் அதை பெற்றுக் கொள்ளுகிறீர்கள் என்று விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுங்கள், எழுந்து நின்று “தேவனாகிய கர்த்தாவே, நான் இதை ஏற்றுக் கொள்ள இங்கிருக்கிறேன்” என்று கூறுங்கள். அது நடைபெறுகிற வரையிலும் அங்கேயே தரித்திருங்கள்.

216 படி ராபின்சன் என்பவர் ஒரு நாள் சோள வயற்காட்டில் நின்று கூறினதுபோல, அவர், “கர்த்தாவே, நீர் பரிசுத்த ஆவியை எனக்குத் தரவில்லையெனில், நீங்கள் திரும்ப வரும்போது இங்கே ஒரு எலும்புக் குவியலைக் காண்பீர்” என்று கூறினார். அவர் முழு மெய் உறுதிப்பாடு கொண்டவராயிருந்தார். நீங்கள் பதறல் கொள்கின்ற வரையிலும் நீங்கள் தேவனிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை.

217 இப்பொழுது இன்றைய விளைச்சலை நீங்கள் கவனித்தீர்களா? நாம் என்ன செய்கிறோம் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? நாம் மேடையின்மேல் வருகின்ற வரையில், நாம் சரியாக தேவனைக் குறித்து போதுமானது நம்மிடம் இருப்பதாக நினைத்து வந்து “ஆம், நாம் மேலே வருவது நல்லதாயிருக்கும்” என்று கூறுகிறோம். இப்பொழுது உலகமெங்கும் உள்ள அனுபவம் இது தான். “ஆம், நான் மேலேறிச் சென்று நிற்பது நல்லது”. “பாருங்கள், பாருங்கள், எனக்குத் தெரியாது. இங்கே நானிருக்கிறேன். பாருங்கள்” என்று கூறுகிறது. ஹீம்! இருப்பது எந்த இடத்தில்! அங்கே அக்கினி எரிதலேயில்லை. அங்கே உற்சாகம் இல்லை. “உள்ளே செல்ல” அங்கே ஒன்றுமில்லை. ஒரு சுவிசேஷகன் என்ற முறையில் தேவனுடைய ஜனங்கள் அந்நிலையிலிருப்பதைக் காண்பதோ என்னைக் கொல்லுகிறது. நாம் எரியூட்டடபட்டவர்களாக இருக்க வேண்டும்.

218 ஆனால் நீங்கள் பாருங்கள். அது என்ன? சரியாக நான் உங்களிடம் கூறினது அதுதான். “நீ வெதுவெதுப்பாய் இருக்கிறாய்” என்று வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரம் கூறுகிறது. அவர், “நீ அனுலுமின்றி குளிருமின்றி இருப்பதால் உன்னை நான் என்

வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்” என்றார். அது சரிதானே? [சபையோர் “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] அதைத்தான் அவர் கூறினார். அதைத்தான் அவர் செய்யப்போவதாகக் கூறியிருக்கின்றதால், நாம் அந்த கூட்டமாயில்லாதிருப்போமாக.

219 நீங்கள் இங்கு தேவையுள்ளவர்களாய் இங்கிருக்கிறீர்கள். நாம் அதை பெற்றுக் கொள்வோம் அல்லது சரியாக இங்கேயே மரித்துப்போவோம். அது உண்மை. நாம் அதைப் பெற்றுக் கொள்வோம் அல்லது மரிப்போம்.

220 இப்பொழுது, என்னுடைய அருமையான சகோதர சகோதரிகளே, நான் கீழே வந்து, நீங்கள் ஏதாவது செய்ய நான் உதவக் கூடுமானால், நிச்சயமாக. நான் அதைச் செய்வேன். இப்பொழுது, வரத்தின் மூலம், நீங்கள் எதற்காக இங்கிருக்கிறீர்கள் என்று என்னால் கூற முடியும். பரிசுத்த ஆவியின் மூலமும், தேவஆவியின் மூலமும் நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்றும், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றும், வருங்காலத்தில் எப்படியிருக்கும் அல்லது அதைப் போன்ற வேறெதையும் என்னால் கூற முடியும். ஆனால் அதை பொருட்படுத்தாதே. நீங்கள் நீங்களாகவே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது நீங்களாகவே இருக்க வேண்டுமே!

221 இப்பொழுது நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? உங்களுடைய கரத்தை உயர்த்தி, “நான் ஆயத்தமாயிருக்கிறேன். இங்கேயே மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன்” என்று கூறுங்கள். இப்பொழுது நீங்கள் அதை பொருளுணர்ந்து கூறினாலொழிய அதைக் கூறாதேயுங்கள். “நான் இங்கே மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன் அல்லது தேவனிடத்திலிருந்து எனக்கு என்ன வேண்டுமோ அதைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்” என்று கூறுங்கள். நீங்கள் உண்மையாகவே ஆயத்தமாயிருக்கிறீர்களா? [சபையோர் களிகூர்ந்து “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.]

222 ஆகவே எங்குமுள்ள கூட்டத்தார் எழுந்திருக்கட்டும் இப்பொழுது நாம் நம்மை ஒன்றாக இணைத்துக் கொள்வோம். நாம் ஜெபம் செய்வோம். இப்பொழுது…ஊழியக்காரர்களே நீங்கள் ஒவ்வொருவரும் இங்கே இந்த ஜனங்களண்டை நடந்து வாருங்கள். இப்பொழுது நீங்கள் கிறிஸ்துவின் கரங்களை சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

223 பரிசுத்த ஆவியை பெற விரும்புகிற நீங்கள், அனுபவத்தைப் பெற விரும்புகிற நீங்கள், ஒரு உணர்ச்சி வசப்பட்ட அனுபவமல்ல; உங்களுக்கு பரிசுத்த ஆவி ஜீவன், ஜீவ அணுவே உட்புறத்தில் தேவையாயுள்ளது! உங்களைத்தானே அடையாளம் கண்டுகொள்ள முடியாத அந்த நினைவிழப்பு வியாதியை நீங்கள் விரட்டி அடிக்கப்பட விரும்புகிறீர்கள். நீங்கள் எங்கு நிற்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்று

உங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் அதை இப்பொழுது விரட்டி அடிப்போம்! இங்கே உனக்கான ஒரு புதிய பிறப்பு உள்ளது, ஒரு உண்மையான அசலான மறுபிறப்பு உள்ளது.

224 இப்பொழுது இம்மக்களின் மீது நாம் நமது கரங்களை வைப்போமாக. ஒரு மனதோடு நம்முடைய கைகளை உயர்த்தி நாம் ஒவ்வொருவரும் ஜெபிப்போமாக,

225 பரலோகப் பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே, கர்த்தாவே அதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அருளும். இந்த சனிக்கிழமை இரவில் பரிசுத்த ஆவியானவர் தாமே பலத்த காற்றடிக்கிற முழக்கம்போல வந்து, இறங்குவராக, இந்த ஜனங்கள் தாமே பரிசுத்த ஆவிக்குள்ளாக அபிஷேகம் பண்ணப்படுவார்களாக. அக்கினியும் தேவ வல்லமையும் இவர்களை விட்டு விலகாதிருப்பதாக. இக்காலையில் அவர்கள் இங்கிருப்பார்களானால் பரிசுத்த ஆவியானவர் வரும் வரை அவர்கள் தரித்திருப்பார்களாக.

226 அது தான் சரியான ஆலோசனை! அதுதான்! அங்கே அது இருக்கிறது. அதுதான் பரிசுத்த ஆவியின் வருகையாயுள்ளது.

[பிரசங்க பீடத்தை விட்டு செல்லுகையில் சகோதரன் பிரான்ஹாம் யாரிடமோ பேசுகிறார்—ஆசி.] நான் அதை முடித்துவிட்டேன். நான் அதை அறிவேன்.

அவ்வளவுதான். இப்பொழுது அதை விசுவாசியுங்கள்! அதை ஏற்றுக்கொள்ளுங்கள்! அவருடைய ஆசீர்வதங்களினால் நிரப்பப்படுங்கள். [சபையோர் தொடர்ந்து களிகூர்ந்து ஜெபிக்கின்றனர்.]

***ஆவிக்குரிய நினைவிழப்பு*** TAM64-0411

(Spiritual Amnesia)

இந்தச் செய்தியானது சகோதரன் வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் அமெரிக்கா, அல்பாமா, பர்மிங்ஹாமில் உள்ள தேசிய பாதுகாப்பு போர்த் தளவாடக் கிடங்கில் 1964-ம் வருடம், ஏப்ரல் மாதம், 11-ம் தேதி, சனிக்கிழமை மாலையில் அளிக்கப்பட்டது, பின்னர் காந்த ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முழுமையான செய்தியாக அச்சிடப்பட்டது. இந்த தமிழ் மொழிபெயர்ப்பு Voice of God Recordings மூலமாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

TAMIL

©2019 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



VOICE OF GOD RECORDINGS

P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.

www.branham.org